# தமிழர் பொருண்மியம்
வாரமலர்
TAMILS ECONOMY

விலை - 100/= இதழ் - 66 21.04.2024


# ஈரான் - இஸ்ரேல் மோதல் இலங்கயைப் பாதிக்குமா?





பின் திகதியிட்ட காசோலைகளை இலங்கை ஏன் கைவிட வேண்டும்? 10



லாபம் தரும் தேனீ வளர்ப்பு முறை 15



நீங்கள் நினைத்ததை அடைவதற்கு செல்வாக்கு மிக்கவராவது எப்படி? 22

# விவசாயத் துறையை அச்சுறுத்தும் வரட்சி!

**காலநிலை மாற்றம் இலங்கையின் விவசாயத் துறைக்கு கடுமையான அச்சுறுத்தலாக உள்ளது. எவ்வாறாயினும், புதுமையான தீர்வுகளை பின்பற்றுவதன் மூலமும், தழுவல் உத்திகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமும், இலங்கையானது பின்னடைவைக் கட்டியெழுப்ப முடியும் மற்றும் அதன் விவசாய உற்பத்தியின் நீண்டகால நிலைத்தன்மையை உறுதிப்படுத்த முடியும்.**

அகிலன்



இலங்கையின் விவசாயத் துறை தற்போதைய காலநிலையால் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது. அண்மைக்காலத்தில் இல்லாதளவுக்கு வாட்டி வதைக்கும் வரட்சி விவசாயத்து றைக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையப்போகின்றது. நீர்ப்பாசனம் பாதிக்கப்படப்போகின்றது. நிலத்தடி நீர் வற்றிப்போகக்கூடிய நிலை கிணறுகளையே நம்பி விவசாயம் செய்யும் எம்மவர்களுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தும். அரசாங்கமும் இவ்விடயத்தில் உடனடிக் கவனம் செலுத்த வேண்டும்.

நேற்று சனிக்கிழமை வயலில் வேலை செய்துகொண்டிருந்த ஒருவர் மயங்கிவிழுந்து இறந்திருக்கின்றார். திருமலை, மூதூர் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது. வயல், தோட்ட வேலைகள் இந்த நிலைமையால் மிகவும் பாதிக்கப் படப்போகின்றது என்பதற்கு இது ஒரு உதாரணம். வடக்கு கிழக்குப் பகுதிகள் இந்த அதிகரித்த வெப்பத்தால் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. கணிக்க முடியாத மழைப்பொழிவு மற்றும் வறட்சியின் அதிகரிப்பு நீர் பற்றாக்குறைக்கு வழிவகுக்கிறது, இது நெல் போன்ற பாசனத்தை சார்ந்த பயிர்களுக்கு முக்கியமானது. இது பயிர் விளைச்சலையும் உற்பத்தித் திறனையும் பெருமளவுக்குக் குறைக்கிறது.

கடுமையான மழை வெள்ளம், பயிர்கள் மற்றும் நீர்ப்பாசன கால்வாய்கள் போன்ற உள்கட்டமைப்புகளை சேதப்படுத்தும். இதனால் விவசாயப் பணிகள் பாதிக்கப்பட்டு மண் அரிப்பு ஏற்பட்டு மண் வளம் குறைகிறது. கடந்த டிசெம்பரில் இவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டிருந்தது.

அதிக வெப்பநிலை பயிர்களை எதிர்மறையாக பாதிக்கலாம், குறிப்பாக முக்கியமான வளர்ச்சி நிலைகளில். இது வளர்ச்சி குன்றியது, குறைந்த மகசூல் மற்றும் உற்பத்தியின் தரம் குறைவதற்கு வழிவகுக்கிறது.

வெப்பமான வெப்பநிலை பூச்சிகள் மற்றும் நோய்களின் வளர்ச்சிக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்குகிறது. இது கணிசமான பயிர் இழப்புகளுக்கு வழிவகுக்கும் மற்றும் பூச்சிக் கொல்லிகளின் அதிக பயன்பாடு தேவைப்படுகிறது, உணவு பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தை பாதிக்கிறது.

கரையோர நிலங்களுக்குள் உப்பு நீர் உட்புகுவதால் அவை விவசாயத்திற்குப் பொருத்தமற்றதாகிவிடும். இது தாழ்வான கரையோரப் பகுதிகளில் உள்ள நெற்பயிர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

### உணவுப் பாதுகாப்பு

காலநிலை மாற்றம் இலங்கையின் உணவுப் பாதுகாப்பைப் பாதிக்கிறது. குறைக்கப்பட்ட விவசாய உற்பத்தி உணவுப் பற்றாக்குறை மற்றும் விலை உயர்வுக்கு வழிவகுக்கும், இது மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களை பாதிக்கிறது.

விவசாயி வாழ்வாதாரம்: பயிர் விளைச்சல் மற்றும் உற்பத்தித்திறன் குறைவது விவசாயிகளின் வருமானம் மற்றும் வாழ்வாதாரத்தை நேரடியாக பாதிக்கிறது. இது அதிகரித்த வறுமை மற்றும் கிராமத்திலிருந்து நகர்ப்புற இடம்பெயர்வுக்கு வழிவகுக்கும்.

தட்பவெப்ப நிலைகளை மாற்றுவது வறட்சியை எதிர்க்கும் அல்லது வெப்பத்தை தாங்கும் பயிர்களை நோக்கி மாறுவதற்கு அவசியமாக இருக்கலாம். இதற்கு தகவமைப்பு உத்திகள் மற்றும் விவசாயி கல்வி தேவை.

2016-2017 வறட்சி இலங்கையின் அரிசி உற்பத்தியை கடுமையாக பாதித்தது, இது நெல் விளைச்சலில் 40 சதவீத சரிவுக்கு வழிவகுத்தது.

கணிக்க முடியாத மழைப்பொழிவு முறைகளால் விவசாயிகள் தங்கள் நடவு மற்றும் அறுவடை சுழற்சிகளை திறம்பட திட்டமிடுவதில் சிரமம் அடைகின்றனர். அதேபோலவே தொடர்ச்சியான கடும் வரட்சியும் அதிகரித்த பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

நீர் திறனுள்ள நீர்ப்பாசன முறைகள், வறட்சியை எதிர்க்கும் பயிர் வகைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மண் மேலாண்மை நுட்பங்கள் போன்ற காலநிலை -எதிர்ப்பு விவசாய நடைமுறைகளில் இலங்கை முதலீடு செய்ய வேண்டும்.

முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புகள் என்பனவும் முக்கியம். தீவிர வானிலை நிகழ்வுகளுக்கு பயனுள்ள முன் எச்சரிக்கை அமைப்புகளை நடைமுறைப்படுத்துவது, விவசாயிகளுக்கு நஷ்டத்தைத் தயார் செய்து, குறைக்க உதவும்.

விவசாயி கல்வி மற்றும் ஆதரவு: காலநிலை-புத்திசாலித்தனமான விவசாய நடைமுறைகளைப் பற்றி விவசாயிகளுக்குக் கற்பித்தல் மற்றும் அவர்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்குவது வெற்றிகரமான தழுவலுக்கு முக்கியமானது.

காலநிலை மாற்றம் இலங்கையின் விவசாயத்துறைக்கு கடுமையான அச்சுறுத்தலாக உள்ளது. எவ்வாறாயினும், புதுமையான தீர்வுகளை பின்பற்றுவதன் மூலமும், தழுவல் உத்திகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமும், இலங்கையானது பின்னடைவைக் கட்டியெழுப்ப முடியும் மற்றும் அதன் விவசாய உற்பத்தியின் நீண்டகால நிலைத்தன்மையை உறுதிப்படுத்த முடியும்.

# ஈரான் - இஸ்ரேல் மோதல் இலங்கயைப் பாதிக்குமா?

**ஈரான் – இஸ்ரேல் – இரு நாகளுமே இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பலமான நண்பர்களாக இருக்கின்றர்கள். எதிர்காலத்திலும் இருக்க வேண்டியவர்கள். இப்போது இரு நாகளும் மோதிக்கொள்வது இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பெரும் இடியாக விழுந்திருக்கின்றது.**

**பார்த்தீபன்**



ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதலுடன் மோதல்கள் தொடருமானால், ஈரானுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் கையாளும் இலங்கையின் பொருளாதாரமும் பாரிய ஆபத்தை எதிர்கொள்ள நேரிடும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

எரிபொருளை இறக்குமதி செய்வதில் இலங்கை ஈரானுடன் நேரடி தொடர்புகளை கொண்டிருக்காவிட்டாலும், இலங்கை எரிபொருளை கொள்வனவு செய்யும்நாடுகளுக்கு ஈரானே பிரதான எரிபொருளை வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானின் எண்ணெய் ஏற்றுமதியில் தொண்ணூறு சதவீதம் சீனாவுக்கே செல்கிறது. இதற்கு மேலதிகமாக, இந்தியா மற்றும் ஜப்பானுக்கும் ஈரான் எரிபொருளை ஏற்றுமதி செய்வதாகவும், இந்தியா மற்றும் சீனாவிடம் இருந்து இலங்கை கணிசமான அளவு எரிபொருளை கொள்வனவு செய்கிறது.

அத்துடன் இலங்கை ஈரானுக்கு சுமார் 80 மில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்வதுடன் 10 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களை ஈரானில் இருந்து இறக்குமதி செய்கிறது. இலங்கைக்கு பொருட்களை இறக்குமதி செய்யும் நாடுகளில் ஈரான் 61வது இடத்தில் உள்ளது.

ஈரான் மீது இஸ்ரேல் இரு தினங்களுக்கு முன்னர் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. மத்திய ஈரானில் உள்ள இஸ்ஃபஹான் மாகாணத்தை குறிவைத்து நடத்தப்பட்ட இந்த தாக்குதல் ஈரானின் உள்நாட்டு பயணத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

மேலும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஈரான் மீது பல்வேறு தடைகளை விதித்துள்ளதாகவும் வெளிநாட்டு செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

இஸ்ரேல் சமீபத்தில் லிபியாவில் உள்ள ஈரான் துணை தூதரகத்தை தாக்கி இராணுவ தளபதிகள் உட்பட பதின்மூன்று பேரை கொன்றது.

இதற்கு பதிலடியாக ஈரான் இஸ்ரேல் மீது சுமார் 300 ஆளில்லா விமானம் மற்றும் ஏவுகணை தாக்குதல்களை நடத்தியது. ஈரான் மீது இஸ்ரேல்இணைந்து தாக்குதல்நடத்தியதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், எஞ்சிய நாட்களில் இரு நாடுகளுக்கும் இடையிலான மோதல்களும், போட்டிகளும் மேலும் அதிகரிக்கலாம் எனவும், இந்த மோதல்கள் உலகப் போராக உருவாகும் அபாயம்இருப்பதாகவும்அரசியல்ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்த நிலையில் இரு நாடுகளுடனும் நெருக்கமான வர்த்தக உறவுகளைக் கொண்டுள்ள இலங்கையின் பொருளாதாரம் இந்தப்போரினால்அதிகளவுக்குப்பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இலங்கையிலிருந்து அதிகளவுக்கு தேயிலையை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்த இரண்டு நாடுகளுமே முன்னணியில் உள்ளன. போர் தீவிமடைந்தால் ஏற்றுமதி மூலமாக இலங்கை பெறும்வருமானம்கணிசமாகப்பாதிக்கப்படலாம்.

இலங்கைக்கும்இஸ்ரேலுக்கும்இடையிலான வர்த்தக உறவுகள் அண்மைக்காலத்தில் வளர்ந்து வருகின்றன. இலங்கை முக்கியமாக தேயிலை, வைரம் மற்றும் கடல் உணவுகளை இஸ்ரேலுக்கு ஏற்றுமதி செய்கிறது, அதே நேரத்தில் தொழில்நுட்பம் மற்றும் இயந்திரங்களை இறக்குமதி செய்கிறது. 2007 இல் ஒரு தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் வர்த்தகத்தை அதிகரித்தது, மேலும் இஸ்ரேலில் இருந்து இன்னும் கூடுதலான முதலீட்டுக்கான சாத்தியம் இருந்தது. ஆனால், போர் தொடருமானால் அது பாதிக்கப்படக்கூடிய ஆபத்து உருவாகியுள்ளது.

அதேபோல, இலங்கைக்கும் ஈரானுக்கும் நீண்டகால உறவு உள்ளது, கடந்த காலங்களில் ஈரான் குறிப்பிடத்தக்க உதவிகளை வழங்கியது. மீன் மற்றும் இரும்பு போன்ற ஈரானிய பொருட்களுக்கு ஈடாக இலங்கை முதன்மையாக தேயிலையை (2022 இல் கூ86 மில்லியன்) ஈரானுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிகளவு அந்நியச்செலாவணியைப்பெறுகிறது.

அமெரிக்கத் தடைகள் பெரிய அளவிலான வர்த்தகத்தை தந்திரமானதாக ஆக்குகின்றன, ஆனால் சமீபத்திய "எண்ணெய்க்கான தேநீர்" ஒப்பந்தம் இலங்கை கடனை திருப்பிச் செலுத்த அனுமதிக்கிறது. மற்றும் இலங்கை உள்கட்டமைப்பு திட்டங்களில் ஈரானிய முதலீடு உட்பட ஆழமான பொருளாதார உறவுகளுக்கான விருப்பத்தை எடுத்துக்காட்டுகிறது.

குறிப்பாக பல்நோக்குத் திட்டமான உமா ஓயாவுக்கு ஈரான் பாரிய முதலீட்டைச் செய்தது. அதற்காகத்தான் ஈரானின் அரசு தலைவர் வருகைதவ இருந்தார். இருந்தபோதிலும், மத்திய கிழக்கில் உருவாகியுள்ள போர் மேகங்கள் அவரது வருகையைக் கைள்விக்குறியாக் கியிருக்கின்றது.

ஈரான் - இஸ்ரேல் - இரு நாகளுமே இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பலமான நண்பர்களாக இருக்கின்றர்கள். எதிர்காலத்திலும் இருக்க வேண்டியவர்கள். இப்போது இரு நாகளும் மோதிக்கொள்வது இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பெரும் இடியாக விழுந்திருக்கின்றது. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காகப் போராடிக்கொண்டிருக்கும் இலங்கைக்கு நிச்சயமாக இது ஒரு பாரிய பின்னடைவுதான்!

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

# அச்சுறுத்தலாகியுள்ள காலநிலை மாற்றம்?!

காலநிலை மாற்றம் என்பது நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் ஒன்றாக இப்போது மாற்றமடைந்து இருக்கின்றது. இதனை எவ்வாறு கையாள்வது – பாதிப்புகளை எவ்வாறு குறைப்பது என்பது தொடர்பான எந்த விதமான திட்டமிடலும் அரசாங்கத்திடம் இல்லை என்பதை அவதானிக்க முடிகின்றது. அதனால்தான் கடும் வெயில் காரணமாக திருமலை மாவட்டத்தில் விவசாயி ஒருவர் மரணமடைந்திருக்கின்றார். வடக்கு கிழக்கில் விவசாயிகள் கடுமையான பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

கடந்த வருட இறுதியில் நாட்டில் தொடர்ச்சியாக பெய்த மழை விவசாயிகளின் விளை நிலங்களில் பெருமழிவுகளை ஏற்படுத்தியது. அப்போதும் விவசாயிகள், கமக்காரர்களுக்குக் கை கொடுக்க அரசாங்கம் முன்வரவில்லை. அதற்கான தொலைநோக்குத் திட்டங்கள் எதுவும் அரசாங்கத்திடம் இருக்கவில்லை. அதிகாரிகளைப் பொறுத்தவரையில் காலைவந்து மாலை வீடு திரும்பும் பணியாளர்களாக மட்டுமே இருக்கின்றார்கள். இப்போது, கடுமையான வரட்சியும் அதேபோன்ற பாதிப்புக்களைத்தான் விவசாயிகளுக்கு ஏற்படுத்துகின்றது.

காலநிலை மாற்றம் இலங்கையின் விவசாயத் துறைக்கு கடுமையான அச்சுறுத்தலாக உருவாகியுள்ளது. அரசாங்கம் என்ற முறையில், இந்த காலநிலை மாற்றங்களை முன்கூட்டியே கண்டுணரக்கூடிய வசதிகளும், அதற்கான நிபுணத்துவம் வாய்ந்தவர்களும் இருக்கின்றார்கள். இந்தக்கால நிலை மாற்றங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களையிட்டு மக்களுக்கு தெரியப்படுத்தி அவர்களை அவற்றுக்குத் தயார்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு!

இந்தப் பொறுப்பை அரசாங்கம் செவ்வனே செய்கின்றதா என்பதைப் பார்த்தால் அதுதான் இல்லை. பெருமளவுக்கு விவசாய உற்பத்திகள் பாதிக்கப்படுவதற்கும், விவசாயிகள் தமது விளை நிலங்களிலேயே மரணத்தைத் தழுவுவதற்கும் இவைதான் காரணமாக இருக்கின்றது. இவையெல்லாம்தொடரும்நிலையில்கூட, அரசாங்கமோ நாடாளுமன்ற உறுப்பினர்களோ அதற்கான நட்டவீட்டைப் பெற்றுக்கொடுப்பதிலோ பாதிப்புக்களைக் குறைப்பதற்கு எதனையாவது செய்யலாமோ என்பதிலோ கவனத்தைச் செலுத்தவில்லை.

காலநிலை மாற்றத்தைக்கையாள்வதற்கான தந்திரோபாயங்களை அரசாங்கம் வகுத்துக்கொள்ள வேண்டும். இதனால், அதிகளவுக்குப் பாதிக்கப்படும் தரப்பாக இருக்கும் விவசாயிகளுக்கும் இது தொடர்பில் விவசாயத் திணைக்களம் போன்றவற்றின் மூலமாக போதிய அறிவுறுத்தல்களை வழங்கலாம். அதன்மூலம்நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு அவர்களைத் தயார்படுத்தியிருக்க முடியும். ஆனால், அரசாங்கமோ அதிகாரிகளோ இந்த விடயத்தில் போதிய அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை.

கடந்தகால நடைமுறைகளைத் தொடர்ந்தும் பின்பற்றாமல், புதுமையான தீர்வுகளை பின்பற்றுவதன் மூலமும், மாற்று முறைகளுக்கான உத்திகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமும், பாதிப்புக்களைக் குறைக்க முடியும். விவசாய உற்பத்தியின் நீண்டகால நிலைத்தன்மையை இவ்வாறான செயற்பாடுகள் மூலமாகத்தான் உறுதிப்படுத்த முடியும்.

## வாரம் ஒரு சிறு தானியம்-

# திகட்டாத தினை அரிசி

**பூரணி**



**இதயம்சீராகசெயல்பட வைட்டமின்பி1அவசியம். இவை தசை மற்றும் நரம்புகளுக்கு இடையில் செய்தியை பரிமாற்ற உதவுவதோடு இதயத்தின் செயல்பாடுகளையும் பாதுகாக்கிறது. இந்த பி வைட்டமின் குறையும் போது இதயத்தின்செயல் பாட்டில் குறைபாடு நேர்கிறது.**

அன்றாட உணவில் தவிர்க்க முடியாத பொருள் அரிசி உணவு என்றாலும் அதிகம் எடுக்ககூடாத பொருள்களில் வெள்ளை அரிசிக்கு 3 வது இடம் உண்டு. ஆனால் சிறுதானியங்கள் இந்த கணக்கில் வராது. சிறுதானியத்தில் ஒன்றான தினை அரிசி தரும் நன்மைகள் குறித்து பார்க்கலாம்.

தினை சிறுதானியங்களில் முக்கியமானது. தானியங்களில் அதிகம் பயிரிடப்படுவதில் இரண்டாவது இடம் இதற்கு உண்டு என்றும் சொல்லலாம். இதை உயிர்ச்சத்து கொண்ட தானியம் என்று அழைக்கிறார்கள். இதை சாப்பிடுவதால் உடலுக்கு பலவிதமான நன்மைகள் கிடைக்கும். தினையில் கால்சியம். புரதம், இரும்புச்சத்து, நார்ச்சத்து, மெக்னீசியம் போன்றவை உண்டு.

தினைக்கு உள்ள சிறப்பு மற்ற தானியங்களை காட்டிலும் இதில் கால்சியம் அதிகமாக உள்ளது. அரிசி, கோதுமை, கேவரகை காட்டிலும் இதில் இரும்புச்சத்து அதிகமாக உள்ளது. கோதுமையில் இருப்பதை விட குறைவாக புரதம் இருந்தாலும் மற்ற பொருள்களோடு கலந்து உண்னும் போது இவை சமன் செய்யப்படுகிறது.

இதயம் சீராக செயல்பட வைட்டமின் பி 1அவசியம். இவை தசை மற்றும் நரம்புகளுக்கு இடையில் செய்தியை பரிமாற்ற உதவுவதோடு இதயத்தின் செயல்பாடுகளையும் பாதுகாக்கிறது. இந்த பி வைட்டமின் குறையும் போது இதயத்தின் செயல்பாட்டில் குறைபாடு நேர்கிறது.

இதயத்துக்கு பலம் சேர்க்கும் பி1 வைட்டமின் தினையில் உண்டு தினை அரிசியை எடுத்து கொள்வதால் இதய நோய் வராமல் தடுக்க முடியும். இதயத்தை பலப்படுத்தும். மறதி நோய் என்னும் அல்சைமர் நோய் தீவிரமாகாமல் இருக்கவும் இந்த பி1 வைட்டமின் உதவுகிறது. எனினும் இது குறித்த சோதனைகள் தொடர்ந்து நடைபெற்றுகொண்டு இருக்கிறது.

உடலில் இரும்புச்சத்து போதுமானதாக இருந்தால் இவை உடல் உறுப்புகளுக்கு ஆக்ஸிஜனை சீராக எடுத்து செல்கிறது. மூளையின்செயல்பாட்டுக்கு பற்றாக்குறையின்றி ஆக்ஸிஜன் கிடைத்தால் அறிவாற்றல் பெருகும். நினைவுத்திறன் அதிகரிக்கும். முதுமையில்வரக்கூடிய மூளை குறைபாடுகளை தடுக்கும். மூளைக்கு தேவையான ஆக்ஸிஜன் தருவதற்கு இரும்புச்சத்து அவசியம் தேவை. அதனால் இரும்புச்சத்து நிறைந்த தினை உங்கள் உடலில் இரும்புச்சத்து குறைபாட்டை உண்டாக்காமல் தடுக்கிறது. தினையில் இருக்கும் புரதமானது நரம்பு மண்டலத்தின்செயல்பாடுகளை ஊக்குவிக்கவும் உதவுகிறது.

தினை குறைந்த க்ளைசெமிக் குறியீட்டை கொண்டுள்ள உணவு. இது நார்ச்சத்து அதிகம் கொண்டது என்பதால் நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்ற உணவாக இதை சொல்லலாம். பொதுவாக நீரிழிவு பாதிப்பு இருந்தால் அவர்கள் அரிசி உணவை தவிர்க்க வேண்டும். அல்லது அளவாக எடுத்துகொள்ள வேண்டும் என்று சொல்வார்கள். அவர்கள் தினை அரிசியை எடுத்துகொள்ளலாம்.

இது செரிமானத்துக்கு அதிக நேரம் எடுத்துகொள்ளும் என்பதால் அரிசி போன்று உடனடியாக செரித்து அதில் இருக்கும் குளுக்கோஸை ரத்தத்தில் கலப்பதில்லை. நீரிழிவு மட்டும் அல்ல இதய நோய், உடல் பருமன், மூட்டு வலி இருப்பவர்களும் தினை அரிசியை உணவாக எடுத்துகொள்ளலாம். இவை உடல் சோர்வையும் உண்டாக்காது. உடல் இழந்த ஆற்றலை மீண்டும் பெற முடியும்.

இன்று குழந்தைகளும் கால்சியம் பற்றாக்குறை பிரச்சனைக்கு ஆளாகிறார்கள். பெண்களுக்கு இயல்பாகவே மெனோபாஸ் காலங்களில் கால்சியம் பற்றாக்குறை உண்டாகும். தற்போது இது அதிகரித்துவருகிறது. தினை அரிசியில் கால்சியம் சத்து அதிகமாகவே உண்டு என்பதால் இதை அடிக்கடி சேர்த்து வந்தால் எலும்புகள் வலிமையடையும். பற்கள் உறுதியாகும்.

வளரும் குழந்தைகளுக்கு தினை அரிசியை அடிக்கடி உணவில் சேர்ப்பதன் மூலம் எலும்புகள் உறுதியாகும் வளர்ந்த பிறகும் எலும்பு தேய்மானம் உண்டாக்காது. இதில் பீட்டா கரோட்டின் இருப்பதால் கண்பார்வையும் கூர்மை அடையும். தினை நரம்பு மண்டலத்தின் செயல்பாடுகளை மேம்படுத்தக்கூடியது. நரம்புகளுக்கு வலு கொடுத்து முறுக்கேற்றும் குணம் கொண்டது. இளவயது ஆண்களுக்கு அடிக்கடி தினை அரிசியில் செய்த தினை உப்புமா, தினை லட்டு, தினை புட்டு, தினை கஞ்சி , தினை முறுக்கு, தேனுடன் கலந்த தினை என்று விதவிதமாக செய்து கொடுப்பார்கள். இதனோடு தினையை இடித்து தேன் கலந்து களியாக்கி கொடுப்பார்கள். இது ஆண்மையை பெருக்கவும் உதவும்




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,88,050 ரூபா.**

**24 கரட் தங்கம் 2,05,100 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**

அன்புள்ள ஆசிரியருக்கு,

**வேலையில் திருப்பி எப்போது வரும்?**

கடந்த ஞாயிற்றுக்கிழமை (14.4.2024) அன்று வெளிவந்த தமிழர் பொருணமியம் எனும் வார இதழில் இடம் பெற்றிருந்த "வேலையில் திருப்பி எப்போது வரும்" எனும் கட்டுரை மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. இக்கட்டுரையில் "கனவுகளை பின்தொடருங்கள்" எனும் விடயத்தினை நாம் எவ்வாறு தவறாக புரிந்து கொண்டிருக்கின்றோம் என்பதை தெளிவாக கூறியுள்ளார் கட்டுரை ஆசிரியர், குரு சிஷ்யன் திரைப்படத்தில் வருகின்ற சிறிய வசனம் ஒன்றை பயன்படுத்தி கூறியிருக்கின்றமை சிறப்பாகவுள்ளது.

ஒரு தொழிலில் நோக்கம், திறமை, சுதந்திரம் என்பன இருந்தால் தானாகவே தொழிலில் விருப்பம் ஏற்பட்டுவிடும் எனும் கருத்து வாசகர் என்ற ரீதியில் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அறிஞர்களின் கருத்துக்களையும் இதனோடு தொடர்பு படுத்திக் கூறி இருக்கின்றமை வரவேற்கத்தக்கது. இருப்பினும் சிற்றில எழுத்துப் பிழைகளும் காணப்படுகின்றன அதனையும் சற்று கருத்திற் கொண்டால் மேலும் சிறப்பாக இருக்கும்.

**விஜயராம் தனுஷா**
**ஊடகக் கற்கைகள்துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

---------------------------

**இளைய தலைமுறைக்கு பயனுள்ள கட்டுரை**

வாசிப்பு ஒரு மனிதனை பூரணப்படுத்தும் என்னதான் இன்று நவீனமயமாதல் இடம் பெற்றாலும் வாசிப்பின் முக்கியத்துவத்திற்கு எதுவும் ஈடாகாது. தமிழர் பொருணமியம பத்திரிக்கையானது அதிகளவில் எமது சமுதாயத்திற்கு தேவையான நல்ல விடயங்களை எடுத்துக்கொண்டுவரும் பத்திரிக்கையாக காணப்படுகின்றமை மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. ஒவ்வொரு வாரமும் புதிய புதிய கருத்துக்களை கூறி எம்மை வாசிக்கத் தூண்டுகின்றது. அத்தோடு இன்னமும் கட்டுரைகள் மற்றும் செய்தி கட்டுரைகளின் எண்ணிக்கையை கொஞ்சம் அதிகரித்தால் அது எம்மைப்போன்ற வாசகர்களின் ஆர்வத்தையும் மற்றும் ஏனையோரிற்கும் வாசிக்க தூண்டும் வகையில் அமையும்.

தமிழர் பொருணமியம பத்திரிக்கையானது எமக்கும் எம் சமூகத்துக்கும் தேவையான விடயங்களை சுவாரஸ்யமாக கூறி வருகின்றது. கடந்த 14.04.2024 ஞாயிற்றுக்கிழமை வெளியான பத்திரிகையில் பிரசுரமான எங்கள் வாழ்வும் வளமும் எனும் தலைப்பில் இடம்பட வீடேடேல் கட்டுரையானது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இன்று அதிகளவில் ஆடம்பரமான வீடு ஒன்றை கட்டிவிட வேண்டும் என எண்ணும் இளம் சமுதாயத்தினர் இத்தகைய விடயங்களை கருத்தில் கொள்வது மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது.

எனவே இளம்தலைமுறையினருக்கு இக் கட்டுரை மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. வாரந்தோறும் வரும் சந்தை நிலவரம் மற்றும் சுய தொழில் முயற்சி பற்றிய கட்டுரை என்பன சுவாரஸ்யமானதாக காணப்படுகிறன. இத்தகைய ஆக்கப்பூர்வமான கட்டுரைகளை இனி வரும் இதழ்களிலும் எதிர்ப்பார்த்து காத்திருக்கிறேன்.

**விக்னேஷ்வரன் கௌஷல்யா ஜீவனி**
**ஊடக கற்கைகள்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -

tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 150/= |
| உருளைக்கிழங்கு | 180/= |
| பச்சை மிளகாய் | 100/= |
| தக்காளி | 100/= |
| மரவள்ளிக்கிழங்கு | 120/= |
| கோவா | 200/= |
| கரட் | 350/= |
| வாழைக்காய் | 100/= |
| சின்ன வெங்காயம் | 300/= |
| பாகற்காய் | 250/= |
| வெண்டக்காய் | 120/= |
| பயற்றங்காய் | 250/= |
| பீற்றூட் | 300/= |
| முருங்கக்காய் | 800/= |
| தேங்காய் | 130/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 188/= |
| கனடா டொலர் - | 214/= |
| சீன யுவான் - | 40/= |
| யுரோ - | 314/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 216/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 366/= |
| சுவிஸ் பிராங் - | 325/= |
| அமெரிக்க டொலர் - | 297/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 197/= |
| கனடா டொலர் - | 223/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 327/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர் டொலர் | 226/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 381/= |
| சுவிஸ் பிராங் - | 337/= |
| அமெரிக்க டொலர் - | 306/= |



நல்ல வேளை இப்ப இருக்கிற பெட்டையளும் மாட்டை அடக்கிறவனைத்தான் கலியாணம் கட்டுவன் எண்டு நாண்டுகொண்டு நிண்டிருந்தா ஒருத்தியும் கலியாணம் காட்சி எண்டு ஒண்டும் இல்லாமல் பாய விறாண்டிக்கொண்டு படுத்திருப்பாளவை எண்ட ஆச்சி கெக்கட்டம் போட்டுச் சிரிச்சா . ஏனெண்டால் இப்ப ஊர் வழியை ஆன மாடுகளும் இல்லை ஆன தைரியமான பெடியளும் இல்லை எண்டுவா அவ .

# எங்கட ஆச்சி



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

முந்தி ஒருநாள் நாங்கள் எங்கடை முத்தத்திலை கதைச்சுக்கொண்டு நிக்க வள்ளிப்பிள்ளை ஆச்சி அடியே உவள் சரசியின்ரை இளைய சிதறுவான் வயல் சாடுவாயிலை மேஞ்சுகொண்டு நிண்ட மயிலாத்தை வீட்டு வன்னி நாம்பனிலை அதுகின்ரை எரியைப்பிடிச்சு ஏறி விளையாட அது அவனைக் கீழை விழுத்தி கொம்பால குத்திப்போட்டுதாம் எண்டு ஒழுங்கையால கத்திக்கொண்டு போனா .

எங்கடை வயல் சாடுவாயிலை மாடுகள் நிண்டு மேயேக்கை எங்கடை பெடியள் உப்படித்தான் மாடுகளுக்கு மேலே ஏறி இருந்து சவாரி செய்வாங்கள் இல்லாட்டில் அதுகளின்ரை ஏரியை கட்டிப்பிடிச்சுக் கொண்டுகோ...கோ..எண்டு கத்திக்கொண்டு இழுபட்டுக்கொண்டு ஓடுவாங்கள் . உது அவங்களுக்கு நல்ல பொழுதுபோக்கு சில நேரங்களிலை மாடுகள் உப்படித்தான் இடிச்சுத் தள்ளுங்கள் இல்லாட்டில் தள்ளி விழுத்தி உழக்கிப்போட்டு ஓடுங்கள் .

வள்ளிப்பிள்ளை ஆச்சி கத்திக்கொண்டு போக தானும் போய் என்ன ஏது எண்டு பாத்துக்கொண்டு வாறன் எண்டு எங்கட ஆச்சியும் வயல் பக்கம் போனா . ஆச்சி போகவும் அப்பு உப்பிடி உந்த மாடுகளோடை விளையாடுறதை எங்கட சங்க இலக்கியங்கள் ஏறு தழுவுதல் எண்டு சொல்லுது எண்டு போட்டு ஏறுகோடல், ஏறுகோள், ஏறு விடுதல் எண்டும் உதை எங்கட இல்லகியங்கள் சொல்லுது எண்டார் .

பேந்து உந்த ஏறுதழுவலைத்தான் இப்பத்தே ஆக்கள் சல்லிக் கட்டு, மஞ்சு விரட்டு, மாடுபிடித்தல், கூளிபிடித்தல், கூளியாடுதல் ,பொல்லெருது பிடித்தல் எண்டு சொல்லுறாங்கள் எண்டார் அவர் சங்க இலக்கியத்திலை எட்டுத்தொகை எண்டு இருக்கெல்லோ அதிலை வாற கலித்தொகையை "கற்றறிந்தார் ஏத்தும் கலி" எண்டு படிச்ச ஆக்கள் சொல்லுறவை . அதில நூற்றி ஐம்பது கலிப்பாக்கள் எண்ட பாட்டுவகை இருக்குது இதிலை பாலைக்கலி , குறிஞ்சிக்கலி, முல்லைக்கலி, நெய்தல்கலி, மருதக்கலி எண்டு அஞ்சு திணைகளுக்கும் தனித்தனியா எண்டு அஞ்சு புலவர்கள் பாடி இருக்கினம் . பெருங்கடுங்கோன் பாலை பற்றி 35 பாட்டுகள் , கபிலர் குறிஞ்சி பற்றி 29 பாட்டுகள், மருதன் இளநாகனார் மருதம் பற்றி 35 பாட்டுகள், சோழன் நல்லுருத்திரன் முல்லை பற்றி 17 பாட்டுகள், நல்லந்துவனார் நெய்தல் பற்றி 33பாட்டுகள் எண்டு பாடி இருக்கினம் .உதிலை முல்லைக்கலியிலை முதல் ஏழு பாட்டுகளிலையும் ஏறு தழுவுதல் பற்றி சோழன் நல்லுருத்திரன் விலாவாரியாச் சொல்லி இருக்கிறார் எண்டுவார் அப்பு .

முல்லைக்கலியில முல்லை நிலத்திலை சீவிச்ச ஆயர் குடிச் சனத்தின்ரை வீரத்தையும்ஆயர்குலத்து குமர்ப்பெட்டையள் ஏறு தழுவி வெண்ட இளந்தாரியளை மட்டுமே காதலிச்சவளவை பேந்து அவனவையையே கலியாணம் கட்டினவளவை எண்ட செய்தியையும் அவர் சொல்லுறார் . கொல்லேறு தழுவுதல் எண்டது உயிருக்கு உலை வைக்கிற ஆபத்தான வேலை எண்டாலும் அப்பத்தேக் குமரியள் வெல்லுறவனை மட்டுமே ஆம்பிளை எண்டு மதிப்பாளவை எண்ட படியால அவங்கள் அப்பத்தே பெடியள் உந்த விளையாட்டை உயிரைப்பணயம் வைச்சு விளையாடி இருக்கிறாங்கள்

அப்பிடி விளையாடேக்கை கன பேர் செத்தும் இருக்கிறாங்கள் அதுமாதிரி கனபேர் காயப்பட்டும் இருக்கிறாங்கள் . உதிலை ஆகப்பகிடி என்னண்டால் தோத்தவங்களை அந்தக் குமரியள் இந்தப் பிறப்பில மட்டும் இல்லை அடுத்த பிறவியிலையும் கூட கலியாணம் கட்ட விரும்பமாட்டாளவையாம் எண்ட செய்தியை "கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்புல்லாளே ஆய மகள்" எண்ட வரியிலை புலவர் சொல்லுறார் எண்டார் அப்பு.

அப்ப முல்லை நிலத்தில இருந்த ஆயர்களுக்கு புலி மாதிரியான மிருகங்களிட்டை இருந்து தங்கடை மாடுகளைப் பாதுகாக்கிற தேவை இருந்ததோடை அவங்கள் நாட்டின்ரை எல்லைப் பகுதிக்காடுகளிலை இருந்த படியால சண்டை வரேக்கை அவங்களைத்தான் முதலிலை தாக்குவாங்கள். எண்டபடியாலை பாதுகாப்பாகவும் இருக்க வேணும் எண்டு போட்டு அவங்கள் வீரம் உள்ளவங்களாக இருக்க வேண்டிய ஒரு தேவை இருந்தது . அதாலைதான் அவங்கள் தன்கழ பெட்டையளைக் கட்டுறவங்கள் நல்ல வீரமா இருக்க வேணும் எண்டு போட்டு உந்த ஏறு தழுவலைக் கொண்டு வந்தவங்கள் எண்டுவார் அப்பு.

நல்ல வேளை இப்ப இருக்கிற பெட்டையளும் மாட்டை அடக்கிற வனைத்தான் கலியாணம் கட்டுவன் எண்டு நாண்டுகொண்டு நிண்டிருந்தா ஒருத்தியும் கலியாணம் காட்சி எண்டு ஒண்டும் இல்லாமல் பாய விறாண்டிக்கொண்டு படுத்திருப்பாளவை எண்ட ஆச்சி கெக்கட்டம் போட்டுச் சிரிச்சா . ஏனெண்டால் இப்ப ஊர் வழியை ஆன மாடுகளும் இல்லை ஆன தைரியமான பெடியளும் இல்லை எண்டுவா அவ .

## வரி விளம்பரம்

## classified advertisement




### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே.

தொடர்புகளுக்கு - 0766482303

---

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புறோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## மன்னாரில் பார்க்க வேண்டிய இடங்கள் - 01

# 3,500 ஆண்டுகள் பழைமை வாய்ந்த இராமர் பாலத்தின் முக்கியத்துவம்



**நிஷாந்தி பிரபாகரன்**

மன்னாரில் உள்ள வரலாற்று சிறப்புகள் கொண்ட பிரதான சுற்றுலாத் தலங்கள் -

1. ஆதாமின் பாலம் - மன்னார்
2. தலைமன்னார் துறைமுகம் மற்றும் கலங்கரை விளக்கம்
3. மன்னார் சென் ஜோர்ச் கோட்டை
4. பாபாப் மரம் - மன்னார்
5. தொங்கு பாலம் குஞ்சுக்குளம்
6. தேக்கம் அணைக்கட்டு-குஞ்சுக்குளம்
7. தலைமன்னார் மணல் குன்றுகள்
8. குதிரைமலை முனை
9. மன்னார் பறவைகள் சரணாலயம் (வங்காலை பறவைகள் சரணாலயம்) ரூ யோதா வெவா சரணாலயம்
10. கீரி கடற்கரை
11. சல்லிக்கடற்கரை-விடத்தல்தீவு
12. மன்னாரில் உள்ள கட்டுக்கரைக்குளம்
13. மீன்பிடி கிராம அனுபவம்
14. கபுறடி(40அடி) காட்டுப்பள்ளி (மூன்று இடங்களில்)
15. அல்லிராணிக்கோட்டை-ARIPPU DUTCH FORT முத்தரிப்புதுறை
16. முத்துக்குளிப்பு-முத்தரிப்புத்துறை
17. டோரிக்கோட்டை-அரிப்பு
18. தேவாங்கு
19. மன்னார் திருக்கேதீஸ்வரம் கோயில் மாதோட்டம்
20. மன்னார் மடு மாதா தேவாலயம்
21. தந்திரிமலே
22. வேதசாட்சிகளின் கல்லறை-தோட்டவெளி
23. மன்னார் மண்ணில் அதிகமாக உள்ள கழுதை
24. தபாற்கந்தோர்-மன்னார் நகரம்

பழையகச்சேரி கோவில்கள் கேபிள் தொடர்புச் சேவை - இரும்புக் கோபுரம் பழைய ஓலைச்சுவடிகள் அரிய புகைப்படங்கள் போன்ற பழமையான வரலாற்று பொக்கிசங்கள் கவனிப்பாரின்றி அழிந்து கொண்டு இருக்கிறது.



**1. ஆதாமின் பாலம் - மன்னார்** (Adam's Bridge)

ஆதாமின்பாலம்என்றும்அழைக்கப்படும் ராமர் சேது (Ram Setu) பாலம் தமிழ் நாட்டில் உள்ள இராமேஸ்வரத்திற்கும் இலங்கையில் உள்ள மன்னார்தீவுகளுக்கும் இடையே உள்ள சுண்ணாம்புக் கற்களால் ஆன ஆழமற்ற மேடுகளாகும். 30 கி.மீ. நீளம் கொண்ட இந்தப் பாலம், மன்னார் வளைகுடாவையும் (தென்மேற்கு) பாக் ஜலசந்தியையும் (வடகிழக்கு) பிரிக்கின்றது. இந்த பாலத்தில் கடல் ஆழம் சுமார் 3 முதல் 30 அடி வரையே உள்ளது. சில மேடுகள் கடல் மட்டத்திற்கு மேலும் உள்ளன.

இந்தப் பாலத்தில் பல்வேறு அகழ்வாராய்ச்சிகள் நடை பெற்று வருகின்றன. அவ்வாறு ஆராய்ந்த குழுவொன்று இந்த பாலம் சுமார் 3,500 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டிருக்கலாம் என்று கருதுகிறது. மன்னார் பழைய லைட் ஹவுஸ் மற்றும் ஆதாமின் பாலம் இடையே உள்ள தூரம் தோராயமாக 2 கிலோ மீட்டர். மன்னார் தீவில் தொடங்கி, இந்தியாவின் பாம்பன் தீவின் திசையில் தண்ணீருக்கு அடியில் மறைந்து போகும் சுண்ணாம்புக் கற்களின் நீளமான ஆடம்ஸ் பாலம் மட்டுமே இன்று இந்தியாவுடன் எஞ்சியுள்ளது.

**2. தலைமன்னார் துறைமுகம்** ( Talaimannar old pier )

தலைமன்னார் துறைமுகம் டிசம்பர் 1964 சூறாவளிக்கு முன்னர், தலைமன்னார் துறைமுகம் இந்திய - இலங்கை இரயில்வேயின் படகு சேவைக்கான முனையமாக செயல்பட்டது. இலங்கையின் தலைமன்னார் மற்றும் இந்தியாவின் ராமேஸ்வரம் தீவில் உள்ள தனுஷ்கோடி இடையே பயணிகளின் போக்குவரத்தை எளிதாக்கியது. இருப்பினும், 1964 இல் ஏற்பட்ட சூறாவளி தலைமன்னார் கடற்பகுதியில் பேரழிவை ஏற்படுத்திய பின்னர் பாதை நிறுத்தப்பட்டது. தலைமன்னார் துறைமுகம் பார்வையிட அனுமதிக்கின்றனர்.

**3. கலங்கரை விளக்கம்** (Mannar Island Lighthouse)



இரு நாடுகளுக்கு இடையே ஒரு கலங்கரை விளக்கம். மன்னார் தீவில் உள்ள மன்னாரின் பிரதான நகரத்திலிருந்து சுமார் 30 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள தலைமன்னார் கலங்கரை




விளக்கம் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் 1915 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. இது 19 மீட்டர் உயரத்தில் நிற்கிறது, வர்ணம் பூசப்பட்ட வெள்ளை முகப்புடன் ஒரு வட்ட உருளை கோபுரம், விளக்குகளுடன் மேலே உள்ளது. இது உருமலையில் அமைந்துள்ளசெயலற்ற கலங்கரை விளக்கம் ஆகும் இந்த அமைப்பு இரும்பினைக் கொண்டு நிறுவப்பட்டது. தலைமன்னார் கலங்கரை விளக்கத்தில் ஏறுவதற்கு தற்போது அனுமதி இல்லை.

**4. மன்னார் சென் ஜோர்ச்கோட்டை** (St.George Fort)

ஒரு வரலாற்று சின்னம். இலங்கையின் மேற்குக் கரையோரத்துக்கு அப்பால் அமைந்துள்ள மன்னார்த் தீவில் அமைந்துள்ள ஒரு கோட்டை ஆகும். அதன் நீளப்பாட்டு அச்சு, வடமேற்கு - தென்கிழக்காக, கரைக்கு ஏறத்தாழச் செங்குத்தாக இருக்குமாறு மன்னார்த்தீவு பாக்கு நீரிணைக்குள்நீண்டு அமைந்துள்ளது. தீவுக்கும், தலைநிலத்துக்கும் இடையே மிகவும் குறுகலான கடற்பகுதியே உள்ளது. மன்னார்க் கோட்டை, தீவின் தென்கிழக்கு முனையை அண்டித் தலைநிலத்தைப் பார்த்தபடி அமைந்துள்ளது.

சதுர வடிவில்அமைந்துள்ள இக்கோட்டை அதன் நான்கு மூலைகளிலும் நான்கு கொத்தளங்கள். கல்வெட்டுக்கள் உள்ளிட்ட பல அம்சங்களை கொண்டுள்ளது இதன் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். இம்மன்னார்க் கோட்டையானது போர்த்துக்கேயர் மன்னார்த் தீவைக் கைப்பற்றிய போது தமது பாதுகாப்பிற்காக அமைத்த ஒன்றாகும். யாழ்ப்பாண இராச்சியத்தின் ஒரு பகுதியாக இருந்த மன்னார்த்தீவை 1560 ஆம் ஆண்டில் போத்துக்கீசர் கைப்பற்றிக் கொண்டனர். போத்துக்கீசர் கைப்பற்றிய யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் நிலப்பகுதி இது. இங்கே அவர்கள் தமது கோட்டை ஒன்றைக் கட்டினர். 1658 ஆன் ஆண்டில் ஒல்லாந்தர் யாழ்ப்பாணத ்தின்மீது படையெடுப்பதற்கு முன்னர் மன்னார்த்தீவைக் கைப்பற்றினர்.

**5. பாபாப் மரம்** ( Baobab / பெருக்க மரம்)

மன்னார் பள்ளி வீதியில் உள்ள மிகப் பழமையான மரம் இதுவாகும். இவ் மரத்திற்கு அருகில் உள்ள தேவாலயம் இதனைப் பராமாரித்து வருகின்றது. 7.5 மீட்டர் உயரமும் 19.5 மீட்டர் சுற்றளவும் கொண்ட இம்மரம் அரேபிய வணிகர்களால் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு நட்டுவைக்கப்பட்டது என நம்பப்படுகின்றது. அளவில் மிகப்பெரியதாக காணப்படும் இம்மரமானது 800 ஆண்டுகள் பழமையானதும்தனக்கென வரலாற்றையும் கொண்டுள்ளது இதன் சிறப்பம்சமாகும்.

**6. தொங்கு பாலம் - குஞ்சுக்குளம்**

மன்னார் தொங்கு பாலம் பல வருட வரலாற்றினைக் கொண்டுள்ளது. 1938ம் ஆண்டு அருவியாற்றைக் கடந்து பெரியகுஞ்சுக்குளம் பெரியமுறிப்பு ஆகிய கிராமங்களை கடந்து செல்வதற்காக வில்பத்து வனவிலங்கு சரணாலயத்தின் பகுதியில் அடர்ந்த காட்டில் உள்ள குஞ்சுக்குளத்தின் இப்பாலம் கட்டப்பட்டது.

மடு தேவாலய சந்தியை அண்மித்த குஞ்சிக்குளம் பகுதியில் மல்வத்து ஓயாவின் மீது பழைய தொங்கு பாலம் உள்ளது. பாலம் 100 மீட்டருக்கும் அதிகமான நீளம் கொண்டது மற்றும் இரும்புத் தாள்கள் போடப்பட்ட இரண்டு வலுவான கேபிள்களால் பிடிக்கப்பட்டுள்ளது. தொங்கு பாலம், முழுக்க முழுக்க எஃகினால் ஆனது. இந்த பாலத்தை இன்று வரை கிராம மக்கள் கடந்து செல்ல பயன்படுத்துகின்றனர். இந்த தொங்குபாலமானது 150மீ நீளமும் 1.2மீ அகலமும் உடையது கீழிருந்து 100 அடி உயரம் இருக்கும் மழைக் காலத்தில் இப்பாலத்திற்கு மேலாக வெள்ளம் பாயும் மன்னாரில் இருந்து மன்னார் மதவாச்சி பிரதான வீதியில் மாதர் கிராமத்திற்கு அருகில் பிரதான வீதியில் இருந்து சுமார் 7.5கிலோ மீற்றர் சென்றால் முன்னுக்கு சிறிய நீர் அணைக்கட்டு அதனை தொடர்ந்து அழகாக தெரிவதுதான் தொங்குபாலம்.

**6. தேக்கம் அணைக்கட்டு - குஞ்சுக்ளகும்**

மன்னார் மாவட்டத்தின் குஞ்சுக்குளம் என்பது பிரபல்யமான கிராமம் ஆகும்.

மன்னார் நகரப்பகுதியில் இருந்து தொங்குபாலத்திற்கு-45.0கிலோ மீற்றர் தூரம். தேக்கம் அணைக்கட்டு-46.0கிலோ மீற்றர் தூரம். குஞ்சுக்குளத்தில் அமைந்துள்ள தொங்குபாலம் குஞ்சுக்குளத்தில் அமைந்துள்ள தொங்குபாலம் தேக்கம் அணைக்கட்டு இரண்டும் ஒருகிலோ மீற்றர் இடைவெளியில் தான் உள்ளது இரண்டுமே அழகானவை மழைகாலத்தில் சென்று பார்ப்போமானால் பசுமையாக நீரின் சலசலப்பு மிகவும் அழகாக காட்சியளிக்கும் அருமையான இடம்.

மன்னாருக்குள் நுழைவதற்கு சற்று முன்பு, GIANT'S TANK ராட்சத தொட்டிக்கு முன்பு இரண்டு பிரிட்டிஷ் கட்டுமானங்கள் உள்ளன. முதலாவது, ராட்சத தொட்டியில் இருந்து அருகிலுள்ள கிராமங்களுக்கு தண்ணீர் விநியோகிக்க அமைக்கப்பட்ட ஒரு பாசன அமைப்பு. கைவிடப்பட்ட கட்டுமானம் தற்போது வறட்சி காலத்தில் தண்ணீர் வழங்குவதற்காக அரசால் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. இது மன்னர்களின் காலத்தில் உருவாக்கப்பட்டது, 18 ஆம் நூற்றாண்டில், டச்சு ஆளுநரின் நிர்வாகம் தொட்டியைப் புதுப்பிக்க நினைத்தது, ஆனால்அந்த திட்டங்கள்நிறைவேறவில்லை.

டச்சுக்காரர்களும் அதைத் தொடர்ந்து வந்த பிரிட்டிஷ்நீர்ப்பாசனப்பொறியாளர்களும் தொட்டியை ஆய்வு செய்தவர்கள், இது ஒரு குறைபாடுள்ள வடிவமைப்புடன் உருவாக்கப்பட்டது என்ற முடிவுக்கு வந்தனர். ஆயினும்கூட, இந்த குளம் புனரமைக்கப்பட்டபோது, அது இலங்கையின் மிகப்பெரிய புராதன நீர்ப்பாசன முறைகளுக்கு இன்னுமொரு உதாரணம் என்பது வெளிப்பட்டது.

பழங்கால நீர்ப்பாசன முறை தொட்டியின் தோற்றம் குறித்து பல கருதுகோள்கள் உள்ளன.

» ஒரு கோட்பாட்டின் படி, ராட்சத தொட்டி 5 ஆம் நூற்றாண்டில் பண்டைய இலங்கை மன்னர் ததுசேனாவால் கட்டப்பட்ட தொட்டியாகும், பின்னர் 12 ஆம் நூற்றாண்டில்மன்னர் ஐ பராக்கிரமபாகுவால் மீட்டெடுக்கப்பட்டது.

» மற்றொரு கோட்பாடு, ஒரு காலத்தில் தீவில் வசித்து வந்த பழங்கால பழங்குடியினரான நாகா மக்களால் இந்த தொட்டி கட்டப்பட்டது என்று கருதுகிறது.

அடுத்த வாரமும் பார்ப்போம்

# பின் திகதியிட்ட காசோலைகளை இலங்கை ஏன் கைவிட வேண்டும்?






AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

பின் திகதியிட்ட காசோலை என்பது எதிர்கால திகதி எழுதப்பட்ட வழக்கமான காசோலை ஆகும். எதிர்கால திகதி வரும் வரை காசோலையை செலுத்த வேண்டாம் என்று காசோலை எழுத்தாளர் வங்கிக்கு அறிவுறுத்துகின்றார்.

**பின் திகதியிட்ட காசோலைகள் பற்றிய சில முக்கிய குறிப்புகள் இங்கே:**

» நோக்கம்: காசோலையை வைப்பு செய்ய பெறுநர் காத்திருப்பதை உறுதிப்படுத்த மக்கள் அவற்றைப் பயன்படுத்துகின்றனர். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன:

» எழுத்தாளர்களிடம் தற்போது போதுமான நிதி இல்லை. ஆனால் எதிர்கால திகதியில் எதிர்பார்க்கின்றனர்.

» காசோலையானது முன்பணம் செலுத்துவதற்கானது.

» செல்லுபடியாகும்காலம்: பின்திகதியிட்ட காசோலைகளின்விதிகள்நாட்டைப்பொறுத்து மாறுபடும்.

» USA மற்றும் UK போன்ற சில நாடுகளில் வங்கிகள் எழுதப்பட்ட திகதிக்கு முன்பே அவற்றைச் செயற்படுத்தலாம்.

» இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற பிற நாடுகளில் காசோலையில் திகதி வரை வங்கி காத்திருக்க வேண்டும்.

» சட்டப்பூர்வமானது: பின் திகதியிட்ட காசோலைகள் பொதுவாக சட்டபூர்வமானவை மற்றும் பேச்சுவார்த்தைக்குட்பட்ட கருவிகளாகக் கருதப்படுகின்றன.

இலங்கையில் பின் திகதியிட்ட காசோலைகள் மிகவும் பொதுவானவை. அவை எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன மற்றும் தற்போதைய பயன்பாடு பற்றி பார்ப்போம்:

**பொதுவான பயன்பாடு:**

» ஒத்திவைக்கப்பட்ட பணம்: பிற நாடுகளைப் போலவே எதிர்காலப் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு பின் திகதியிட்ட காசோலைகள் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக பணம் செலுத்துபவரிடம் தற்போது போதுமான நிதி இல்லை. ஆனால் எழுதப்பட்ட திகதிக்குள் எதிர்பார்க்கப்படுகின்றது.

» முன்கூட்டியே செலுத்துதல்: சேவைகள் அல்லது பொருட்கள் பின்னர் வழங்கப்படுவதற்கான உத்தரவாதமாக அவை செயற்படுகின்றன.

**குறைபாடுகள் மற்றும் ஊக்கமின்மை:**

» பவுன்ஸ் செய்யப்பட்ட (திரும்பும் அபாயம்) காசோலைகள்: காசோலைகள் போதுமான நிதி இல்லாததால் அடிக்கடி திரும்பிவிடும். இது வங்கிகள் மற்றும் பெறுநர்களுடனான உறவுகளை மோசமாக்குகிறது.

» இலத்திரனியல் கொடுப்பனவுகளை நோக்கி நகர்தல்: இலங்கை மத்திய வங்கி மிகவும் நம்பகமான மற்றும் திறமையான இலத்திரனியல் கொடுப்பனவு முறைகளை நோக்கி மாற்றத்தை ஊக்குவிக்கின்றது.

ஒட்டுமொத்தமாக, இலங்கையில் பின் திகதியிட்ட காசோலைகள் இன்னும் பயன்படுத்தப்படும். அதே வேளையில், காசோலைகள் திரும்பும் அபாயம் காரணமாக மாற்றுக்கட்டண முறைகளைப்பின்பற்றுவதற்கான அழுத்தம் உள்ளது.

பணப்புழக்கத் தேவைகளைத் தீர்க்க வணிக நிறுவனங்கள் எவ்வாறு பின் திகதியிட்ட காசோலைகளைப்பயன்படுத்தலாம்.

சில சூழ்நிலைகளில் பின் திகதியிட்ட காசோலைகள் பயன்படுத்தப்படலாம் என்பது உண்மைதான். என்றாலும் பணப்புழக்கத் தேவைகளைத்தீர்க்க வணிகங்கள் அவற்றை நம்பியிருப்பது பொதுவாக பரிந்துரைக்கப



படுவதில்லை. ஏன் என்றால்

» நிதிகளின் நம்பகத்தன்மையற்ற ஆதாரம்: பின்திகதியிட்ட காசோலைகளுக்கு உத்தரவாதம் இல்லை. நிலுவைத் திகதியில் போதுமான பணம் இல்லாததால் காசோலை திரும்பும் அபாயம் உள்ளது. இது பணப்புழக்கத் தேவையினை தீர்ப்பதற்குப் பதிலாக பணப்புழக்கச் சிக்கலை உருவாக்குகின்றது.

» நிதிக்கான தாமதமான அணுகல்: காசோலைக்கு மதிப்பளிக்கப்பட்டாலும் பணத்தை உடனடியாகப் பெற முடியாது. காசோலை அழிக்கப்படும் வரை நீங்கள் காத்திருக்க வேண்டும். இதற்கு பல நாட்கள் ஆகலாம். உங்களுக்கு விரைவாக நிதி தேவைப்பட்டால் இது உங்கள் பணப்பு ழக்கத்தை சீர்குலைக்கும்.

» மோசடியான காசோலைகளின் ஆபத்து: தொலைந்து போன அல்லது திருடப்பட்ட பின்திகதியிட்ட காசோலைகளை மாற்றியமைத்து மோசடியாகப் பணமாக மாற்றலாம். இது நிதி இழப்புக்கு வழிவகுக்கும்.

» திறமையற்றது மற்றும் காலாவதியானது: நவீன மின்னணு கட்டண முறைகள் வேகமானவை, மிகவும் பாதுகாப்பானவை, மேலும் சிறந்த பதிவுகளை வழங்குகின்றன.

**பணப்புழக்கத்தை மேம்படுத்த வணிகங்களுக்கான மாற்று வழிகள்:**

» கட்டண விதிமுறைகளை பேச்சு வார்த்தை நடத்தவும்: வாடிக்கையாளர்களிடம் இருந்து பணம் வசூலிக்க உங்களுக்கு அதிக நேரத்தை வழங்க வழங்குனர்களுடன் நீட்டிக்கப்பட்ட கட்டண விதிமுறைகளை பேச்சுவார்த்தை நடத்த முயற்சிக்கவும்.

» முன்கூட்டியே பணம் செலுத்து வதற்கான சலுகைகள்: முன்கூட்டியே பணம் செலுத்துவதற்குத் தள்ளுபடிகளை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர்களை விரைவாக பணம் செலுத்த ஊக்குவிக்கவும். இது உங்கள் பணப்புழக்கத்தை மேம்படுத்த உதவும்.

» நிதியளிப்பு விருப்பங்களை ஆராயுங்கள்: பணப்புழக்க இடைவெளிகளைக் குறைக்க குறுகிய கால கடன்கள் அல்லது மாற்றுக் கடன் முறைமைகளை கருத்தில் கொள்ளுங்கள். இருப்பினும், கடன் குவிப்பை தவிர்க்க இந்த விருப்பங்களை எச்சரிக்கையுடன் பயன்படுத்தவும்.

» பெறத்தக்க கணக்குகளை மேம்படுத்துதல்: நிலுவையில் உள்ள (இன்வாய்ஸ்களை) வரவுகளை கண்காணிப்பதற்கும் தாமதமாகச் செலுத்து பவர்களை உடனடியாகப் பின்தொடர்வதற்கும் ஒரு அமைப்பைச் செயற்படுத்தவும். இது விரைவாக பணம் சேகரிக்க உதவும்.

» எலக்ட்ரானிக் கொடுப்பனவுகளைத் அமுல்படுத்தவும்: நுகர்வுகள், ஆன்லைன் கட்டண நுழைவாயில்கள் அல்லது மொபைல் வாலட்கள் போன்ற மின்னணு கட்டண முறைகளை நோக்கி மாறவும். இவை விரைவான தீர்வுகள் மற்றும் மேம்பட்ட பணப்புழக்கத் தெரிவுநிலையை வழங்குகின்றன.

இந்த மாற்று உத்திகளில் கவனம் செலுத்துவதன் மூலம், வணிகங்கள் தங்கள் பணப்புழக்கத்தின் மீது சிறந்த கட்டுப்பாட்டை அடையலாம் மற்றும் பின் திகதியிட்ட காசோலைகளுடன் தொடர்புடைய அபாயங்களைத் தவிர்க்கலாம்.

பலரிடம் இருக்கும் கேள்வி என்னவென்றால் 'ஃபேக்டரிங் மற்றும் பிற ஒத்த முறையில் பல்வேறு நிதி நிறுவனங்களில் இருந்து நிதி வசதிகளைப் பெற, திகதியிட்ட காசோலைகளைப் பயன்படுத்த முடியுமா?'

அதற்கான பதில் 'இல்லை'. காரணம் என்னவென்றால்

» நிதிகளின் நிச்சயமற்ற தன்மை: நிதி நிறுவனங்கள் நிதிக்கான உத்தரவாதமான அணுகலை நம்பியுள்ளன. பிந்தைய தேதியிட்ட காசோலைகள் நிச்சயமற்றவை ஏனெனில்:

» காசோலை வழங்குபவரிடம் நிலுவைத் திகதியில் போதுமான நிதி இல்லாமல் இருக்கலாம்.

» காசோலை மோசடியாக இருக்கலாம்.

» தாமதமான சேகரிப்பு: செல்லுபடியாகும் என்றாலும் நிதி சேகரிப்பதில் தாமதம் உள்ளது. நிதி நிறுவனம் தங்கள் சொந்த பணப்புழக்கத்தை பாதிக்கும், காசோலை செல்லுபடி அற்றதாக மாற்றமடைய காத்திருக்க வேண்டும்.

» வரையறுக்கப்பட்ட மதிப்பு: காரணி நிறுவனங்கள் பொதுவாக முடிக்கப்பட்ட விற்பனையைக் குறிக்கும் விலைப்பட்டியல்களைக் கையாளுகின்றன. பின் திகதியிட்ட காசோலையானது பணம் செலுத்துவதற்கான எதிர்கால வாக்குறுதியைக் குறிக்கின்றது. நிறைவு செய்யப்பட்ட பரிவர்த்தனை அல்ல.

**பெறத்தக்கவைகள் மூலம் நிதியளிப்பதற்கான மாற்று வழிகள்:**

» ஃபேக்டரிங் (Factoring): வணிகங்கள் தங்கள் பெறத்தக்க கணக்குகளை (இன்வாய்ஸ்கள்) ஒரு ஃபேக்டரிங் நிறுவனத்திற்கு தள்ளுபடியில் விற்க ஃபேக்டரிங்கைப் பயன்படுத்தலாம். ஃபேக்டரிங் உடனடி பணப்புழக்கத்தை வழங்குகின்றது. இருப்பினும், வணிகம் விலைப்பட்டியல் மதிப்பை விட குறைவாகவே பெறுகின்றது.

» விலைப்பட்டியல் தள்ளுபடி: ஃபேக்டரிங் போன்றது. ஆனால் வணிகமானது வாடிக்கையாளர்களிடமிருந்து பணம் செலுத்துவதோடு நிதி நிறுவனத்திற்கு ஒரு பகுதியை அனுப்புகின்றது. இது கூடுதல் கட்டுப்பாட்டை வழங்குகின்றது. ஆனால் சேகரிப்புகளை நிர்வகித்தல் தேவைப்படுகிறது.

**பின் திகதியிட்ட காசோலைகளுக்கு:**

» பாதுகாப்பு வைப்பு: அரிதான சந்தர்ப்பங்களில் ஒரு நிதி நிறுவனம் ஒரு பெரிய கடன் விண்ணப்பத்தின் ஒரு பகுதியாக பின் திகதியிட்ட காசோலையை ஏற்கலாம், ஆனால் பிணையத்தின் முதன்மை ஆதாரத்துடன் கூடுதல் பாதுகாப்பாக மட்டுமே ஏற்கலாம்.

எவ்வாறாயினும், பின் திகதியிட்ட காசோலைகள் நிதியுதவியைப் பாதுகாப்பதற்கான ஒரு வழியாகத் தோன்றினாலும், அவை நம்பகமானவையல்ல.

**காசோலைகளுக்குத் திகதி !**

இலங்கையில் பின் திகதியிட்ட காசோலைகளுக்கு திகதி இடவேண்டிய காலத்தில் குறிப்பிட்ட சட்டக் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை. இருப்பினும், மனதில் கொள்ள வேண்டிய சில பொதுவான நடைமுறைகள் மற்றும் பரிசீலனைகள் உள்ளன:

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
21.04.2024

# ஒரு தொழில் முயற்சியாளர் வாழும் சூழலுக்கு ஏற்ப தம்மை தகவமைத்துக் கொள்கிறார்

**நேர்கண்டவர் - ஞானம் கவினி**

**என்னைப் போன்று வீடுகளில் இருக்கும் பெண்களுக்கு நான் சொல்ல விரும்புவது ,எங்களது சிறிய சிறிய தேவைகளுக்கும் அப்போதும் இன்னும் ஒருவருடைய கையை எதிர்பார்த்துக் கொண்டு இருப்பது நல்லதல்ல, எந்த சூழ்நிலையிலும் அவசரமாக பணம் தேவைப்படும் பொழுது நாங்கள் நமக்கான தேவைகளை நிறைவேற்றுவதற்கு பழகிக் கொள்ள வேண்டும் என்கிறார்**

இலங்கை திருநாட்டின் மத்திய மலை நாட்டில் அமைந்துள்ள கண்டிப்பிரதேசத்தில் பிறந்து ,திருமணத்தின் பின்னால் தனது வாழ்க்கையை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்திருக்கும் காமராஜ் ஞான சௌந்தரி என்ற தொழில் முயற்சியாளரை தமிழர் பொருண்மியம் நேர்கண்டது.

மிக வித்தியாசமான சூழலில் தன்னை இணைத்து கொண்டிருந்தாலும் அங்கேயும் தன்னை தகவமைத்துக் கொள்ளும் வல்லமையை பெற்றிருக்கிறார் ஞான சௌந்தரி.வடக்கின் வளங்களின் ஒன்றான கற்பகதரு விருட்சத்தின் ஓலைகளில் இருந்து கிடைக்கப்பெறும் சார்புகளின் மூலம் பலஉற்பத்திகளை ஆக்கி வருகிறார் இவர்.

கண்டி மாநகரின் பச்சை பசேல் என்ற மலைகளின்நடுவே, ஒரு சிறிய குடும்பத்தின் மகளாகப் பிறந்தவர் ஞானசௌந்தரி, வறுமையும்வாழ்க்கை சுமையும்ஒன்றோடு ஒன்று போட்டி போட அந்த தேயிலை தோட்டங்களின் மத்தியில் சிறுமியாய் தனது காலங்களை கழித்தவரை இளமைப் பருவம் திருமண பந்தத்தோடு யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்திருக்கிறது.

பால்ய காலங்கள் அனைத்தையும் மலைப்பிரதேசங்களில் கழித்த இவரின் வாழ்க்கை பாதை சடுதியாக திசை மாறிய போது, ஒன்றுக்கொன்று தொடர்பற்ற அல்லது முற்றிலும் வேறுபட்ட வாழ்க்கை பின்னணியில் அல்லது சூழல் பின்னணியில் அவர்வாழ வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

என்றாலும் சவால்களை எல்லாம் சமாளித்தபடி ,தனது குடும்பத்தின் நிலைமையும் சமூகத்தின் ஒற்றுமையும் ஒருங்கே கொண்டு இதுவரை எல்லா பெண்களுக்கும் போல கணவனின் நிழலில் வாழ்ந்து கொண்டிருந்த இவரது மனதில் ஓர் திருப்பமாக அமைந்திருக்கிறது இந்த தொழில் முனைவு,

தற்போது தனது சிறிய சம்பாத்தியத்தில் தனது குழந்தைக்கு தேவையானவற்றை வாங்கிக் கொடுக்கும் போது ஏற்படுகின்ற மன நிறைவு தனியானது என்று மகிழ்ச்சியோடு சிரிக்கிறார் ஞான சௌந்தரி.

நிமிர்ந்தும் நிற்கும் பனை மரங்களில் இருந்து தனக்கான மூலப் பொருட்களை பெற்றுக் கொள்ளும் இவர், ஒவ்வொரு குடும்பத்திலும் மிகவும் அத்தியாவசிய தேவையான பல சமையலறை உபகரணங் களையும் அழகுப் பொருட்களையும் உருவாக்கி கொடுக்கிறார்.

எமது பிரதேசத்தில் பனைவளம் அதிகமாக இருக்கிறது அதனால் மூலப்பொருட்களுக்கு உங்களுக்கு தட்டுப்பாடு இருக்காது அல்லவா? என்று வினாவிய பொழுது

போர் நடைபெற்ற காலங்களுக்கு முன்பு பனை வளம் இன்னும் அதிகமாக இருந்தது என்று கூறுகிறார்கள்,

தற்போது உள்ள நிலவரத்தை பொருத்த வரையில், இருக்கின்ற பனைகளில் கூட ஏறி நமக்கு தேவையான பனை ஓலைச் சார்புகளை வெட்டி தருவதற்கு உரிய மனிதர்களை கண்டுபிடிப்பது அரிதாகத்தான் இருக்கின்றது. தற்போதயெல்லாம் ஒரு பனைமரத்தில் ஏறி சார்பை வெட்டுவதற்கு 500 ரூபாய் கூலி கேட்கிறார்கள்,

சில வேளைகளில் பனை மரத்திலிருந்து சரியான பதத்தில் சார்புகளை வெட்ட முடியாமல் போனதும் உண்டு. அந்த நேரத்தில் எல்லாம் எங்களது மூலப் பொருளுக்கான தட்டுப்பாடு மிகவும் அதிகமாக இருக்கும்.



**காமராஜ் ஞான சௌந்தரி**

மழை காலங்களில் மூலப் பொருட்களை பெற்றுக் கொள்வது மிகவும் கடினம் ஆகவே ஒரு இடைப்பட்ட காலத்தில் முடிந்த





அளவுக்கு எமது ஊரிலிருந்து இவற்றை கொள்வனவு செய்ய நினைக்கிறோம் .ஆனால் நாங்கள் நினைப்பது போல் எமது ஊரில் இருக்கிற பனை மரங்களில் இருந்து சார்புகளை பெற்றுக் கொள்வது அவ்வளவு சுலபமானதாக இருக்கவில்லை. ஆகவே வெளி மாவட்டங்களில் இருந்து ஓலைச் சார்புகளை விற்பனை செய்பவர்களிடம் நாங்கள் விலைக்கு வாங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டி ருக்கிறோம். முன்பு போல இப்போது யாரும் பனையை மட்டும் நம்பி வாழ்வாதாரத்தை நடத்துபவர்களாக இல்லை என்கிறார்.

ஒரு காலத்தில் பனை எங்கள் வாழ்வோடு ஒப்பிட்டுப் போயிருந்தது தலையின் அடி முதல் நுனி வரை எங்களுக்கு தேவையான அத்தனையும் இலவசமாகவே கிடைத்திருக்கிறது. பனை வளத்தை நம்பி தமது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்தி இன்று அதிகாரிகளாகவும் சமூகத்தில் அந்தஸ்து உள்ளவர்களாக மிகவும் இருக்கின்ற பலரை நாங்கள் அறிவோம். என்றும் அவர்கள் எல்லாரும் பெருமையாக சொல்லக்கூடிய அளவுக்கு மூதாதையர்கள் நமது மூதாதையர்கள் பனையோடு ஒன்றித்த வாழ்வை மிக மகிழ்ச்சியாக வாழ்ந்து இருக்கிறார்கள். ஆனால் இன்றைய நாகரீக சமூகம் இவ்வளவு மாற்றம் அடைந்திருக்கிறது என்று சொன்னால் நம்ப முடியாமல் தான் இருந்தது.

ஆனால் அது தான் உண்மை, தற்போது பனையில் ஏறி தொழில் செய்பவர்களை விரல் விட்டு எண்ணக்கூடியவாறு இருக்கின்றது .அப்படி தொழில் செய்பவர்கள் இருந்தாலும் ,அவர்களுக்கான கூலி மிகப் பெரிதாக இருக்கின்றது .அதனால் தமக்கான மூலப்பொருளை பெற்றுக்கொள்வதில் மிகவும் திறமைப்படுவதாக அவர் தெரிவிக்கிறார்.

உங்கள் உற்பத்திக்கான கேள்வி எப்படி இருக்கின்றது? சந்தையில் உங்கள் உற்பத்தி பொருட்களை விரும்பி பெற்றுக் கொள்கிறார்களா ?என்று வினாவினோம்.

அதற்கு அவர் ,ஆம் ,உண்மையில் எங்கள் உற்பத்தி பொருட்களுக்கான கேள்வி அதிகமாகவே இருக்கின்றது ஏனென்றால்,எங்கள் பொருட்கள் ஒவ்வொன் றும் மிகத் தரமாக தயாரிக்கப்படுகின்றது .நீண்ட நாட்கள் பாவனைக்கு உகந்த பொருட்களாகவும் பார்வைக்கும் கவர்ச்சி யானவையாகவும் எங்கள் உற்பத்தி பொருட்கள் இருப்பதால், விற்பனை யாளர்களும் அயல் அவர்களும் நமது உற்பத்தி பொருட்களை விரும்பி பெற்றுக் கொள்கின்றனர் .

அத்தோடு சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினரால் முன்னெடுக்கப் படும் எல்லா கண்காட்சிகளிலும் எமது உற்பத்தி பொருட்கள் விற்பனைக்கு வருகிறது .

அங்கேயும் கூடுதலான உற்பத்திகளை விற்பனை செய்ய முடிகிறது இதனால் எங்களுக்கு எப்போதும் சந்தை வாய்ப்புகள் பஞ்சம் இருப்பதில்லை என்று மலர்ச்சியுடன் சொல்லுகிறார்.

என்றாலும் நான் முதலில் பனையோலை உற்பத்திகளை ஆரம்பிக்கும் போது கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது.

இந்த நவீன காலத்தில் இப்போதும் இதனை பயன்படுத்துபவர்கள் அதிகமாக இருப்பார்களா இதனை எப்படி விற்பனை செய்யப்போகிறேன் என்று யோசித்திருந்தேன் . ஆனால் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தின் சிறு தொழில் அபிவிருத்தி பிரிவினரால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் ஒவ்வொன்றும் அந்த பயத்தை போக்கிவிட்டன உண்மையில் அங்கே பணியாற்றும் உத்தியோகத்தர்கள் எப்போதும் தொழில் முயற்சியாலர்களுக்காக யோசித்து செயல்படுபவர்களாக இருக்கிறார்கள் .அதனால் எமது பிரதேசத்தில் முயற்சியான்மையாளர்களும் அதிகமாக இருக்கிறார்கள் என்று பெருமையாக சொல்லுகிறார்.

சரி உங்களைப் போன்ற பெண்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள் ? என்று கேட்டபோது

என்னைப் போன்று வீடுகளில் இருக்கும் பெண்களுக்கு நான் சொல்ல விரும்புவது ,எங்களது சிறிய சிறிய தேவைகளுக்கும் அப்போதும் இன்னும் ஒருவருடைய கையை எதிர்பார்த்துக் கொண்டு இருப்பது நல்லதல்ல ,எந்த சூழ்நிலையிலும் அவசரமாக பணம் தேவைப்படும் பொழுது நாங்கள் நமக்கான தேவைகளை நிறைவேற்றுவதற்கு பழகிக் கொள்ள வேண்டும் .

ஒவ்வொரு பெண்ணும் தனக்கான ஒரு சுய தொழிலை மேற்கொண்டால் தன்னம்பிக்கையும் மகிழ்ச்சியும் உருவாகு வதோடு தனது குடும்பத்தில் உள்ள கணவனுக்கும் மற்றும் உறவினர்களுக்கும் அனுசரணை யாகவும் இருக்கும் என்று நம்புகிறேன்.



நான் ஆரம்பத்திலேயே இந்த தொழிலை தொடங்கி இருக்க வேண்டும் ,ஆனால் காலம் கடந்து தொடங்கி இருக்கிறேன் ,என்றாலும் இதனால் நான் பெருமைப் படுகிறேன் .ஒரு சொந்தமான தொழில் எனக்கு இருக்கிறது என்பதில் எனக்கு எப்போதும் மகிழ்ச்சி தான் .இந்த தொழிலின் மூலம் பல நல்ல அறிமுகங்களும் நல்ல பாடங்களும் எனக்கு கிடைத்திருக்கிறது .வாழ்க்கையில் முன்னேறி செல்வதற்கு ஒவ்வொருவருக்கும் சுய தொழில் முக்கியமானது என்று கூறியபடி தனது நீத்துப் பட்டியை பின்னுவதில் மிக கவனமாக ஈடுபடுகிறார் ஞான சௌந்தரி.

**பணத்தை அடைய வெளிநாடுதான் வழி என்பவர்கள் அங்கிருந்து வரும் பணத்தை மட்டுமே பார்க்கிறார்கள். அதை அங்குள்ளவர்கள் எப்படி உழைக்கிறார்கள் என்பதை அறிவதில்லை. அங்கிருந்து உறவினர்கள் அனுப்பும் படங்களில் அவர்கள் காட்டும் அழகிய தோற்றங்களுக்கும் அதன் பின்னணிக்கும், அவர்கள் பார்க்கும் வேலைக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது**

# வேலை வாய்ப்பு

# எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

"இலமென்று எண்ணி இருப்பாரைக் காணின் நிலமென்னும் நங்கை நகும்."

பெற்றவர்கள் பிள்ளைகளை படிப்பித்தே ஆக வேண்டும் என்ற கட்டாயம் இன்றைய உலகின் ஏராளமான நெருக்கடிகளுக்கு காரணமாக உள்ளது. கல்வி என்பது தன்னை வாழ வைக்க வழிநடத்த போதுமானதாக இருந்தாற் போதும் என்று அன்றைய காலம் இருந்தது. இன்று ஒருவருடைய கல்வியை தீர்மானிக்கும் சக்தி அயலவர்களாக இருக்கிறது.

பக்கத்து வீட்டுப்பிள்ளை என்ன படிக்கிறான் எவ்வளவு படிக்கிறான் அவனை மிஞ்ச எனது பிள்ளை எவ்வளவு படிக்க வேண்டும் என்ற வகையில் பெற்றவர்கள் சிந்திக்கிறார்கள். தமிழர்களின் மிகப்பெரிய அடையாளமான யாழ்ப்பாணம் குறுகிய நிலப்பகுதியை கொண்டது. இந்த மக்களின் வாழ்வாதாரத்துக்கு போதிய நிலம் அங்கில்லை. எனவே அவர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலேயே தமது முதலீட்டை கல்வியில் வைத்தனர். கல்வியின் காரணமாக நாடு கடந்தவர்களும் கல்வியால் பெற்ற உத்தியோகத்தால் நாடு கடந்தவர்களுமாக, திரைகடலோடியும் திரவியம் தேடிய மக்களாக இவர்கள் இருந்தனர்.



கொண்டுவந்த பணத்தையும் பிரயோசனமாக முதலீடு செய்யாமல் கட்டடங்களாக மாற்றினார்கள். ஆட்களே இல்லாத வீட்டையும் அடுக்கு மாடியாக கட்டி வைப்பது வழமையாயிற்று. இதனால் இருந்த கொஞ்சநஞ்ச தோட்ட நிலங்களும் கட்டடங்களாக மாற்றமடைந்தது. உள்ளூரில் வசிப்போரும் படிபடியென்று படித்துவிட்டு கொழும்பு கண்டி காலியென தொலை தூரங்களிலாவது அரசாங்க வேலை கிடைத்தால் போதுமென அலைந்து வேலை தேடிக்கொள்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி என்பது வர்த்தக நிலையங்களும், பெரிய உணவு விடுதிகளும் தங்கிடங்களும் கலியாண மண்டபங்சகளும் என தொடர்கிறது. எதாவது பயன்தரும்பல தொழிலாளர்களுக்கு வேலை தரக்கூடிய தொழிற்சாலைகளை உருவாக்கியவர்களும் அவற்றை சத்தமில்லாமல் மூடிவிட்டு வெளிநாடுகளுக்கு திரும்பிவிட்டார்கள்.

இந்த நிலையில் உள்ரில் வாலிபர்களின் நிலை மிகவும் கவலைக்கிடமாக மாறி வருகிறது. சினிமா கதாநாயகன் விஜய் போல தனுஷ் போல அவர்கள் சாதாரண வேலைசெய்தோ அல்லது எதுவும் பண்ணாமல் திரிந்தோ வாழ்க்கையை கொண்டு நடத்தினாலும் அவர்களுக்கு பெரிய பணக்கார வீட்டுப்பெண் தேவை. அவன் படிக்காதவனாக இருந்தாலும், கல்லூரி மாணவியை காதலிக்க வேண்டும். வாழ்க்கையை தானே கதாநாகனாக நினைத்துக் கொண்டு வாழ நிர்ப்பந்திக் கப்படுகிறான்.

ஆனால் பெண்களைப் பொறுத்த மட்டில் நிலைமை வேறு விதமாக உள்ளது. அவர்களுக்கு உள்ளூர் மாப்பிள்ளை தேவையில்லை என்றாகிறது. ஒரு விவாகரத்து செய்தவனாயினும், பிள்ளை ஒன்றிரண்டு இருந்தாலும், பரவாயில்லை வெளிநாட்டு மாப்பிளையே வேண்டும் என்பதற்காக கலியாணத் தரகர்களிடம்



பணத்தைக் கொடுத்து அலைகிறார்கள்.

நாளாந்தம் இப்படி பெண்கள் ஏற்றுமதியாகிறார்கள். நன்கு படித்த அழகிய இளம் பெண் தன்னைவிட பல வயது கூடிய முதுமைத் தோற்றமுள்ள ஒருவரை திருமணம் செய்து கொண்டு லண்டனுக்கு பயணமான பொழுது அவளது தாயும் தந்தையும் ஏழுபது வயதுக்கு மேல் இருந்தனர். “அவையள் ரெண்டு பேருக்கும் பெஞ்சன் வருது சமாளிப்பினம்” என்பது அவளது வாதம். எனினும் அவள் அவர்களுக்கு ஒற்றைப்பிள்ளை.

ஒரு தடவை பாண்டிய மன்னன் சபையில் மூன்று கேள்விகளை கேட்டான். ஒன்று பாவம் செய்யாமலே பாவத்திற்கான பலனை பெறுபவன் யார்? பிள்ளை பெற்றும் மலடி யார்? கடவுள் எவருடைய கண்ணில் தெரிவார்? இந்தக் கேள்விகளுக்கான சரியான பதிலை ஒரு சிறுமியே கூறினாளாம்.

முதலாவது கேள்விக்கு பாவம் செய்யாமலே பாவத்தை அனுபவிப்பவன் நீதான். குடிமக்கள் செய்யும் பாவ புண்ணியங்களுக்கு அரசனே பொறுப்பு. இரண்டாவது ஒரு மரம் தோப்பாகாது. ஒரு பிள்ளை பெற்றவளும் மலடியே. எனவே உன்னை மட்டுமே ஈன்ற உன்தாய் மலடியாகும்.

அடுத்து அவள் மூன்று கிண்ணத்தில் பால் கொண்டுவரச் செய்தாள். ஒரு கிண்ணம் வட்டமாகவும், இரண்டாவது சதுரமாகவும்மூன்றாவது முக்கோணமாகவும் இருந்தது. அதில் பாலை நிறைத்த சிறுமி மூன்றிலும் உள்ளது பால்தான் அனால் அதன் வடிவங்கள் எப்படி உள்ளது அதது ஊற்றப்பட்ட கிண்ணத்தின் வடிவில் உள்ளதுபோல தனது வடிவத்தை வைத்திருப்பது போல பக்தியின் தன்மைக்கேற்ப கடவுளை நாம் காணலாம்.

முன்னர், இந்த பாலில் என்னவெல்லாம் உண்டு என்று கேட்டாள் அரசன் பால் தயிர் வெண்ணெய் நெய் என அடுக்கினான். “சரி இப்போது அது எங்கே இருக்கிறது காட்டு” என்றாள். “அது அதை பக்குவப்படுத்திதான் நாம் அறிய வேண்டும்” என்றான். “சாதாரண பாலுக்கே இப்படி என்றால் கடவுளையும் நமது மனத்தை கடைந்துதானே பெற முடியும்” என்றாள் சிறுமி.

இந்த கதை எதற்கு என்று யோசிக்க வேண்டாம். எம்மில் ஏராளமான இளைஞர்களுக்கு பணம் சம்பாதிக்க வழி தெரியவில்லை. அல்லது பொறுமையில்லை. வேலைவாய்ப்பு இல்லை என புலம்புகிறார்கள். வெளிநாடுகளில் வேலை கொட்டிக் கிடப்பதாக எண்ணி வெளிநாடு செல்வதையே விரும்புகிறார்கள்.

பலதடவை முயன்று நான் நினைக்கிறேன் அவர் முப்பது வயதிலிருந்து முயன்று பெருமளவு பணத்தையும் செலவிட்டு, வெளிநாடு செல்ல முடியாமல் போன ஒருவர் ஈற்றில் நாற்பதாவது வயதில் வெளிநாட்டுக்கு சென்று விட்டார். ஆனால் இப்போது அவருக்கு தோதான வேலை கிடைக்க வில்லை. இங்கே சாரதியாக இருந்தவர். அங்கே சாரதியாக வேலை பார்க்க முடியாது. அவரது உடல் நிலைக்கு பொருத்தமற்ற சுவாத்தியம், அவரால் வேலை செய்ய முடியவில்லை.

அவருக்கு உதவி செய்து அவரை அழைத்தவர்களுக்கு தனது பயணச் செலவை அவர் கட்டியாக வேண்டும். அதைவிட அவர் அங்கு தங்க ஒரு இடம் வேண்டும். தனது மனைவி பிள்ளைகளுக்கு பணம் அனுப்ப வேண்டும். கடைசியில் ஒரு கடையில் வேலைக்கு சேர்ந்தார். அங்கும் அவரால் நிலைத்து நிற்க முடியவில்லை. காரணம் அவர் ஒரு கவுரவமான குடும்பத்தின் பிள்ளை. அவரால் மதுபானங்கள் விற்கும் கடையில் எப்படி நிற்க முடியும்? அந்த வேலையும் தொலைத்தார். அவர் வெளிநாடு செல்லும் முயற்சியில் தொலைத்த பணம் பத்து ஏக்கர் கமத்தை இதுவரை தொடர்ச்சியாக விதைத்து வெட்டக்காணும். அதை செய்திருந்தால் வருடத்தில் அவர் மனைவி பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்திருக்கலாம்.

பணத்தை அடைய வெளிநாடுதான் வழி என்பவர்கள் அங்கிருந்து வரும் பணத்தை மட்டுமே பார்க்கிறார்கள். அதை அங்குள்ளவர்கள் எப்படி உழைக்கிறார்கள் என்பதை அறிவதில்லை. அங்கிருந்து உறவினர்கள் அனுப்பும் படங்களில் அவர்கள்காட்டும்அழகிய தோற்றங்களுக்கும் அதன் பின்னணிக்கும், அவர்கள் பார்க்கும் வேலைக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. நல்ல கல்வியும் அதனால் வரும் உத்தியோகமும், வெளிநாட்டு வார்ப்பும் ஒருவருக்கு மிகையான இன்பத்தை தருவதில்லை.

“மாடிமனை கோடி பணம் வாகனம் வீண் ஜம்பம் வாழ்வினிலே ஒருவருக்கு தருவதல்ல இன்பம். இணையில்லா மனையாளிழன் வாய்மொழியே இன்பம் அவள் இதழ்சிந்தும் புன்னகையே அளவில்லாத இன்பம். மழலை மொழி வாயமுதம் வழங்கும் பிள்ளைச்செல்வம் உன் மார்மீது உதைப்பதிலே வருவதுதான் இன்பம்” என்று ஒரு புலவன் எழுதியது எவ்வளவு உண்மை. நாமும் நமது மண்ணும் வளம்பெற உழைத்தாலே நாம் மகிழ்ச்சியோடும் குடும்பத்தை பிரியாமலும் இன்பமாக வாழலாம்.

வேலைகள் எமது மண்டணில் கொட்டிக்கிடக்கிறது உழைக்கும் கைகளுக்காக பல வேலைகள் காத்திருக்கின்றன.

# லாபம் தரும் தேனீ வளர்ப்பு முறை

**இன்னும் சொல்லப்போனால் வேளாண்மைக்கு பலம் தரும் முக்கியமான துணையாற்றல் இந்தப் பண்ணைசார் தொழில்கள்தான். அவற்றில் உழவர்களுக்கு நேரடியாகப் பயன் தரும் தொழில்களில் ஒன்று தேனீ வளர்ப்பு.**

**க. அமுதன்**

இயற்கை எமக்கு தந்த மிகப்பெரும் கொடைகளில் ஒன்று தேனீ வேளாண்மை என்றால், ஏர் பிடித்து உழுவது மட்டுமே என்று பலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன்வளர்ப்பு போன்ற பண்ணைசார் தொழில்களும் வேளாண்மைதான்.

இன்னும் சொல்லப்போனால் வேளாண்மைக்கு பலம் தரும் முக்கியமான துணையாற்றல் இந்தப் பண்ணைசார் தொழில்கள்தான். அவற்றில் உழவர்களுக்கு நேரடியாகப் பயன் தரும் தொழில்களில் ஒன்று தேனீ வளர்ப்பு. ஒரு பண்ணையில் தேனீக்களை வளர்ப்பதன் மூலம் அந்தப் பகுதியில் மகரந்தச் சேர்க்கை சிறப்பாக நடைபெறும்.

அதுமட்டுமல்ல தேனிக்களின் ரீங்கார சத்தத்தை கேட்கும் யானைகள் அந்த பக்கமே வராது, "பலரும் தேனை ஒரு உணவுப்பொருளாக மட்டுமே பார்க்கின்றனர். அது, ஒரு மருந்துப் பொருளும்கூட. ஒவ்வொருவரும் வீட்டுக்கு ஒன்று அல்லது இரண்டு தேனீ வளர்ப்புப் பெட்டிகளை வைத்தால், தங்கள் குடும்பத்துக்குத் தேவையான தேனை அவர்களாகவே தயாரித்துக்கொள்ள முடியும்.

தேனீ வளர்ப்பில் தேன் மட்டுமே கிடைப்பதில்லை. தேன் மெழுகு, அரச உணவு எனப்படும் 'ராயல் ஜெல்லி' ஆகியவையும் கிடைக்கின்றன. இவை பெரும்பாலும் மருந்துப் பொருட்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவை தவிர, தேனீயைக் கொட்ட வைத்து மூட்டுவலி நீக்குவது, அயல் மகரந்தச் சேர்க்கை மூலம் உயிரினப் பன்மையை வளர்ப்பது போன்ற மற்ற பயன்களையும் தேனீக்கள் தருகின்றன. இப்படிப் பல பயன்களைக் கொண்ட தேனீ வளர்ப்புக்கு உரங்கள், பூச்சிக்கொல்லிகள், பாசன வசதி என எதுவுமே தேவையில்லை.

பெட்டிகள் மட்டும் இருந்தால் போதும். தேனீக்கள் தானாகத் தேடி வரும் என்கின்றார்கள் மலைத் தேனீ, கொம்புத் தேனீ, இந்தியத் தேனீ, இத்தாலியத் தேனீ, கொசுத் தேனீ ஆகிய ஐந்து வகைத் தேனீ இனங்கள் உள்ளன. எனினும், இவற்றில் இந்தியத் தேனீ மட்டுமே தேனீ வளர்ப்புக்கு ஏற்றதாக உள்ளது.

தேனீ வளர்க்க ஆரம்பித்து மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒரு முறை தேன் எடுக்க முடியும். ஒவ்வொரு முறையும் சுமார் 4 கிலோ அளவுக்குத் தேன் கிடைக்கும். இன்றைய சந்தை மதிப்பில் ஒரு கிலோ தேனுக்கு ரூ.1200 விலை.

தேனீக்களுக்கு முக்கிய உணவாகத் தருகிறார்கள். அதனால், அந்தத் தேனீக்களால் சுத்தமான தேனை உற்பத்தி செய்ய முடிவதில்லை.

இன்றைக்குச் சந்தையில் கிடைக்கும் பெரும்பாலான தேன், இப்படி கலப்படம் மிகுந்த 'சர்க்கரை நீர்த் தேன்'தான். ஆனால், சுத்தமான தேனை வாங்கி உண்ண வேண்டும் என்கிற விழிப்புணர்வு சாப்பிடுபவர்களுக்கு வந்துவிட்டது. எனவே சுத்தமான தேனை உற்பத்தி செய்ய வேண்டும் என்கிற விழிப்புணர்வு, விளைவிப்பவர்களுக்கும் வர வேண்டும்" இன்றைக்கு உலகம் முழுவதும் தேனீக்களின் எண்ணிக்கை குறைந்துவருவதாகத் தகவல்கள் வருகின்றன.

அதற்கான முக்கியக் காரணம் பூச்சிக்கொல்லிகள், செயற்கை உரங்கள்தான்



அந்த வகையில் உழவர்களுக்கு இது கூடுதல் வருமானமாகவும் அமையும். "பொதுவாக, மழை நாட்களில் தேனீக்கள் கூட்டைவிட்டு வெளியே பறக்காது. காரணம் அவற்றின் இறகுகளில் மழைநீர் பட்டால், அவற்றால் பறக்க முடியாது. அதனால் அவை உணவு தேட முடியாது. உணவில்லையென்றால், அவை இறந்துவிடும். எனவே, மழைக்காலங்களில் அவை உணவுக்காகப் பெரும் பாடுபடும்.

அந்த நேரத்தில் நீரில் சிறிது சர்க்கரையைக் கலந்து பெட்டியில் வைக்கலாம். தேனீக்கள் அந்த நீரை உண்டு, தேனை வெளியேற்றும். ஆனால், இன்றைக்குப் பெரும்பாலான தேனீ வளர்ப்பாளர்கள், சர்க்கரை நீரையே என்கிறார்கள் விஞ்ஞானிகள். எப்போது நாம் இயற்கை வேளாண்மைக்குத் திரும்புகிறோமோ, அப்போது நம் நாவிலும் 'இயற்கையான' இனிப்பு நடனமாடும்!

தேனீப்பெட்டி கூடு : இது, ஒரு நீளமான சாதாரண பெட்டியாகும். இதன் மேல் பக்கவாட்டில், பல அடுக்குகளை கொண்டுள்ளது.

தோராயமாக 100 செ.மீ நீளம், 45 செ.மீஅகலம் மற்றும் 25 செ.மீ உயரத்தை உடையது. இந்த பெட்டியில் ஒரு தட்டின் நடிப்பும் 2 செ.மீ ஆகும். தேனீக்கள் உள்ளே நுழைவற்கு 1 செ.மீ அகலமுடையஓட்டைகளை கொண்டுள்ளது. மேல் அடுக்குகள் அடர்ந்த தேன் கூட்டை அமைப்பதற்கு தேவையான மொத்தத்தை



பெற்று இருக்க வேண்டும். சுமார்1.5 செ.மீ மொத்தம் இதற்கு போதுமானது. தேனீக்கள் தேன் கூட்டை கட்டஏதுவாக, அடுக்குகளுக்கிடையேயான இடைவேளி 3.3 செ.மீ இருத்தல்நல்லது.

இப்பெட்டி செய்யும் முறையினை லழர வரழந இணையதலம் ஊடாக பாருங்கள், குறிப்பு தேனீ பெட்டிகளை நிழல் அதிகமுள்ள இடத்தில் வைக்க வேண்டும் மலர்கள் அதிகமாக உள்ள இடத்தில் பெட்டியை வைக்க வேண்டும் வாரத்துக்கு ஒரு நாள் திறந்து பார்த்தால் போதும் தேனீ வளர்ப்புப் பெட்டியின் அடிப்பாகத்தில் மெழுகு இருக்கிறதா என்பதை அவ்வப்போது உறுதி செய்துகொள்ள வேண்டும் தேனீ பெட்டியை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு இரவில் மட்டுமே கொண்டு செல்ல வேண்டும் பெட்டியைத் திறந்து பார்க்கும்போது, பக்கவாட்டிலிருந்துதான் திறக்க வேண்டும்.

இல்லையென்றால், தேனீ கொட்டிவிடும் சாத்தியம் உண்டு வண்ணத்துப்பூச்சிகள், தேனீப் பெட்டியில் முட்டையிட்டுச் செல்லும் சாத்தியம் உள்ளது. அவ்வாறு முட்டையிட்டால், அது தேனீப் பெட்டியைப் பயனற்றதாக மாற்றிவிடும். தேனீக்கள் எல்லாம் வெளியேறிவிடும். எனவே, வண்ணத்துப்பூச்சி முட்டையிட்டிருந்தால், அதை தேங்காய் நார் கொண்டு தேய்த்து அகற்றிவிடலாம். செய்யக் கூடாதவை. நமது வாசனையைத் தேனீக்கள் நினைவில் வைத்திருக்கும்.

எனவே, தேனீப் பெட்டிக்கு அருகில் செல்லும்போது, உடலில் வாசனைத் திரவியங்களின் வாசனை இருக்கக் கூடாது. அவ்வாறு இருந்தால், தேனீ கொட்டிவிடும் புகைப்பிடித்துவிட்டு, மது அருந்திவிட்டு தேனீப் பெட்டிக்கு அருகில் செல்லக் கூடாது நீர் தேங்கும் இடத்தில் தேனீப் பெட்டியை வைக்கக் கூடாது. அதேபோல எறும்பு அதிகமுள்ள இடத்திலும் வைக்கக் கூடாது. தேனீப் பெட்டியை அடிக்கடி திறந்து பார்க்கக் கூடாது. அதேபோல அடிக்கடி தேனீப் பெட்டியின் இடத்தையும் மாற்றக் கூடாது தேனீக்களின் சில தகவல்கள் ஒவ்வொரு தேனீப் பெட்டியிலும் ராணித் தேனீ, ஆண் தேனீக்கள், வேலைக்காரத் தேனீக்கள் என்று மூன்று வகையான தேனீக்கள் இருக்கும் ஒவ்வொரு தேனீப் பெட்டியிலும் ஒரேயொரு ராணித் தேனீ மட்டுமே இருக்கும்.

ஆண் தேனீக்கள் 50 முதல் 100 எண்ணிக்கையில் இருக்கும். வேலைக்காரத் தேனீக்கள் ஆயிரக்கணக்கில் இருக்கும். அந்த ராணித் தேனீ ஒரு நாளைக்கு 300 முதல் 400 முட்டைகள்வரை இடும் ஒரு ராணித் தேனீயின் வாழ்நாள் 3 வருடங்கள். அதில் முதல் ஒன்றரை வருடம் மட்டுமே அது முட்டையிடும் ராணித் தேனீயின் முட்டையில் கருவுற்ற முட்டை, கருவுறாத முட்டை என இரண்டு விதம் உள்ளது.

கருவுற்ற முட்டையிலிருந்து ராணித் தேனீயும் வேலைக்காரத் தேனீக்களும் பிறக்கின்றன. கருவுறாத முட்டையிலிருந்து ஆண் தேனீக்கள் வருகின்றன. கருவுற்ற முட்டையிலிருந்து எந்தத் தேனீ முதலில் வெளிவருகிறதோ அதுதான் ராணித் தேனீ. மற்றவையெல்லாம் வேலைக்காரத் தேனீ. 'ராயல் ஜெல்லி' என்று சொல்லப்படும் அரச உணவை வேலைக்காரத் தேனீக்கள்தான் சுரக்கும். அதுவும் அவை பிறந்து 2 நாட்களுக்கு மட்டுமே. ஆண் தேனீ கொட்டாது. வேலைக்காரத் தேனீக்கள்தான் கொட்டும்.



» வங்கிநடைமுறைகள்: பெரும்பாலான இலங்கை வங்கிகள் எழுதப்பட்ட தேதிக்கு முன்னர் பின் திகதியிட்ட காசோலையை பணமாக்காது. இது வங்கிக் கொள்கை மற்றும் சட்டப்பூர்வத் தேவை இல்லை.

» செல்லுபடியாகும்காலம்: பின்திகதியிட்ட காசோலைகளுக்கு கூட வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதங்கள் வரை பொதுவான செல்லுபடியாகும்காலம் உள்ளது. அந்த காலத்திற்குப் பிறகு காசோலை வங்கியால் மதிக்கப்படாமல் போகலாம்.

» முன்கூட்டியே பணமாக்குதலின் அபாயங்கள்: சில சந்தர்ப்பங்களில் வங்கியின் கொள்கையைப் பொறுத்து எழுதப்பட்ட திகதிக்கு முன்னதாகவே பின் திகதியிட்ட காசோலை பணமாக்கப்படலாம். நிதி முன்கூட்டியே திரும்பப் பெறப்படும் என்று நீங்கள் எதிர்பார்க்கவில்லை என்றால் இது சிக்கல்களை ஏற்படுத்தும்.

» பயன்பாடு மாறுகிறது: உலகளவில் இதில் உள்ள அபாயங்கள் காரணமாக பின் திகதியிட்ட காசோலைகளில் இருந்து ஒரு நகர்வு உள்ளது. மின்னணு கட்டண முறைகள் அவற்றின் வேகம், பாதுகாப்பு மற்றும்வசதி காரணமாக பெருகிய முறையில் பிரபலமாகி வருகின்றன.

**பரிந்துரைகள்:**

» தெளிவானதகவல்தொடர்பு: எந்தவொரு குழப்பத்தையும் தவிர்க்க, எதிர்பார்க்கப்படும் வைப்புத் திகதியைப் பற்றி பின் திகதியிட்ட காசோலையைப் பெறுபவருடன் தெளிவாகத் தொடர்புகொள்வது முக்கியம்.

» மாற்று வழிகளைக் கவனியுங்கள்: சிறந்த பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மைக்கு, நுகுவுகள் அல்லது ஆன்லைன் கட்டண நுழைவாயில்கள் போன்ற மின்னணு கட்டண முறைகளை முடிந்தவரை ஆராயுங்கள்.

இலங்கையில் பின் திகதியிட்ட காசோலைகள் இன்னும் பயன்படுத்தப்படும். அதே வேளையில், அதனுடன் தொடர்புடைய அபாயங்கள் குறித்து விழிப்புடன் இருப்பது மற்றும் ஒரு இலகுவான மற்றும் பாதுகாப்பான நிதி பரிவர்த்தனைக்கான மாற்றுக் கட்டண முறைகளைக் கருத்தில் கொள்வது முக்கியம்.

**இலங்கையில் 6 மாதங்களுக்கும் மேலாக பதியப்பட்ட திகதியிட்ட காசோலைகள் பயன்படுத்தப்படுகின்றன.**

பல்வேறு குறைபாடுகள் இருந்தபோதிலும், 6 மாதங்களுக்கும் மேலான திகதிகளைக் கொண்ட பின் திகதியிட்ட காசோலைகள் இன்னும் இலங்கையில் பயன்படுத்தப்படுவதற்கு பல காரணங்கள் உள்ளன:

» பழக்கம் மற்றும் பாரம்பரியம்: பல வணிகங்கள் மற்றும் தனிநபர்களுக்கு பின் திகதியிட்ட காசோலைகள் நீண்ட காலமாக வழக்கமாக உள்ளது. புதிய நடைமுறைகளுக்கு மாறுவதற்கு நேரம் ஆகலாம். குறிப்பாக பழக்கமான அமைப்புடன் வசதியாக இருப்பவர்களுக்கு.



» பெரிய பரிவர்த்தனைகள்: மிகப் பெரிய பரிவர்த்தனைகளுக்கு குறிப்பாக தவணைகள் அல்லது எதிர்காலக் கொடுப்பனவுகள் சம்பந்தப்பட்டவை, நீண்ட காலத்திற்கு (6 மாதங்களுக்கும் மேலாக) பரவிய பின் திகதியிட்ட காசோலைகள் எதிர்கால உறுதிப்பாட்டைப் பெறுவதற்கான ஒரு வழியாகப் பயன்படுத்தப்படலாம்.

» இலத்திரனியல் முறைகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல்: இலங்கை டிஜிட்டல் கொடுப்பனவுகளை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கும் வேளையில் நம்பகமான இணையம் அல்லது பயனர் நட்பு இலத்திரனியல் கட்டண தளங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அணுகலுடன் இன்னும் காணப்படுகின்றது. இது அந்த பகுதிகளில் பாரம்பரிய காசோலைகளை இன்னும் நாடிச் செல்வதற்கு காரணியாக காணப்படுகின்றது.

» விழிப்புணர்வு இல்லாமை: சில வணிகங்கள் மற்றும் தனிநபர்கள் நீண்ட கால பின் திகதியிட்ட காசோலைகளுடன் தொடர்புடைய அபாயங்கள் அல்லது மின்னணு கட்டண மாற்றுகளால் வழங்கப்படும் நன்மைகள் மற்றும் பாதுகாப்பு பற்றி முழுமையாக அறிந்திருக்க மாட்டார்கள்.

» உணரப்பட்ட கட்டுப்பாடு: சிலருக்கு, குறிப்பாக அவர்களின் எதிர்கால நிதி நிலைமை குறித்து அவர்கள் உறுதியாக தெரியவில்லை என்றால், பின் திகதியிட்ட காசோலைகளைப் பயன்படுத்துவது நிதிகளின் ஓட்டத்தின் மீது உணரப்பட்ட கட்டுப்பாட்டை வழங்கக்கூடும்.

**இந்த காரணங்கள் இருந்தாலும், பின் திகதியிட்ட காசோலைகளிலிருந்து விலகிச் செல்வதற்கான உந்துதல் அதிகரித்து வருகின்றது என்பதை நினைவில் கொள்வது அவசியம்:**

» அரசாங்க முன்முயற்சிகள்: இலங்கை அரசாங்கம் நிதி, கல்வியறிவு, மற்றும் இலத்திரனியல் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிக்கின்றது.

» வங்கி அமைப்பு: வங்கிகள் நீண்ட திகதியிட்ட காசோலைகளை ஊக்கப்படுத்தாமல் போகலாம். ஏனெனில் பணம் செலுத்தும் ஆபத்து மற்றும் அது அவர்களின் சொந்த பணப்புழக்க நிர்வாகத்தில் ஏற்படும் சிரமம்.

» வணிக அபாயங்கள்: சேதமடைந்த வாடிக்கையாளர் உறவுகள் மற்றும் சாத்தியமான சட்டச் சிக்கல்கள் உட்பட, திரும்பும் காசோலைகளுடன் தொடர்புடைய அபாயங்கள் குறித்து வணிகங்களே அதிகளவில் அறிந்திருக்கின்றன.

இலங்கையில் நீண்ட திகதியிட்ட பின் திகதியிட்ட காசோலைகள் இன்னும் பயன்படுத்தப்பட்டாலும் மின்னணு கட்டண முறைகள் மிகவும் பரவலாகவும், பாதுகாப்பானதாகவும், அணுகக்கூடியதாகவும் இருப்பதால் இந்த முறைமை காலப்போக்கில் குறைய வாய்ப்புள்ளது.

**பின் திகதியிட்ட காசோலைகளைப் பயன்படுத்தும் போது கருத்தில் கொள்ள வேண்டிய சில அபாயங்கள்:**

» முன்கூட்டியே பணமாக்குதல்: காசோலைக்கு எதிர்கால திகதி இருந்தாலும், வங்கி அதை பணமாக மாற்றலாம். அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற சில நாடுகளில், வங்கிகள் எழுதப்பட்ட திகதிக்காக காத்திருக்க வேண்டிய கட்டாயம் இல்லை. பிந்தைய திகதி வரை கிடைக்கும் நிதியை நீங்கள் நம்பியிருந்தால் இது சிக்கல்களை ஏற்படுத்தும்.

» போதுமான நிதி இல்லை: இது ஒரு பெரிய ஆபத்து. காசோலையில் எழுதப்பட்ட திகதிக்குள் உங்கள் கணக்கில் போதுமான பணம் இல்லை என்றால் அக்காசோலை

திரும்பி உங்கள் வங்கியில் இருந்து கட்டணத்திற்கு வழிவகுக்கும். சில சந்தர்ப்பங்களில், குறிப்பிட்ட நாட்டில் உள்ள சட்டங்களைப்பொறுத்து இது சட்டசிக்கலையும் ஏற்படுத்தலாம்.

» மோசடி: தொலைந்து போன அல்லது திருடப்பட்ட பின் திகதியிட்ட காசோலையை மாற்றியமைத்து மோசடியாக பணமாக மாற்றலாம். இதனால் நிதி இழப்பு ஏற்படும். காசோலையில் உங்கள் தனிப்பட்ட விவரங்கள் இருந்தால் அடையாளத் திருட்டு அபாயமும் உள்ளது.

» தவறான தகவல் தொடர்பு: காசோலையை எப்போது டெபாசிட் செய்யலாம் என்பதில் பணம் செலுத்துபவருக்கும் பெறுநருக்கும் இடையே குழப்பம் இருக்கலாம். இது பதற்றம் மற்றும் எதிர்பாராத கட்டணங்களுக்கு வழிவகுக்கும்.

» காலாவதியான முறை: மின்னணு கட்டண முறைகள் பொதுவாக வேகமானவை, பாதுகாப்பானவை மற்றும் சிறந்த கண்காணிப்பை வழங்குகின்றன.

பின் திகதியிட்ட காசோலைகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் அபாயங்களை வணிக நிறுவனம் எவ்வாறு குறைக்கலாம்?

**ஆரம்பகால பணமாக்குதலைத் தவிர்க்கவும்:**

» உங்கள் வங்கியின் கொள்கையை அறிந்து கொள்ளுங்கள்: பின் திகதியிட்ட காசோலைகள் குறித்த உங்கள் வங்கியின் கொள்கையை அறிந்து கொள்ளுங்கள். சில பிராந்தியங்களில் எழுதப்பட்ட திகதிக்காக வங்கிகள் காத்திருக்க வேண்டியதில்லை.

» மாற்று வழிகளைக் கவனியுங்கள்: முன்கூட்டியே பணமாக்குவது ஒரு முக்கிய கவலையாக இருந்தால் மின்னணு நிதி பரிமாற்றங்கள் (நுகர்வுகள்) அல்லது பாதுகாப்பான ஆன்லைன் கட்டண முறைகள் போன்ற பாதுகாப்பான விருப்பங்களை ஆராயுங்கள்.

**போதாத நிதியைக் குறைத்தல்:**

» வலுவான பணப்புழக்க மேலாண்மை: காசோலை வரும்போது போதுமான நிதி கிடைப்பதை உறுதிசெய்ய வலுவான நிதித் திட்டத்தை செயற்படுத்தவும்.

» முன் அங்கீகாரம்: சில சந்தர்ப்பங்களில், பின் திகதியிட்ட காசோலைகளுக்கு வங்கிகள் முன் அங்கீகாரத்தை வழங்கலாம். நிலுவைத் தேதிக்குள் உங்களிடம் பணம் இருக்கும் என்பதை இது சரிபார்க்கின்றது. ஆனால் காசோலை முன்கூட்டியே பணமாக்கப்படாது (வங்கி கொள்கையைப் பொறுத்து) உத்தரவாதம் அளிக்காது.

**மோசடி அபாயத்தைக் குறைக்க:**

» பாதுகாப்பான சேமிப்பு: இழப்பு அல்லது திருட்டைத் தடுக்க, பின் திகதியிட்ட காசோலைகளை பாதுகாப்பாக சேமிக்கவும். பூட்டிய பாதுகாப்பான அல்லது பாதுகாப்பான தாக்கல் முறைமையினை பயன்படுத்துவதைக் கவனியுங்கள்.

» வரையறுக்கப்பட்ட தகவல்: காசோலையில் எழுதப்பட்ட தனிப்பட்ட தகவலைக் குறைக்கவும். பணம்பெறுபவரின் பெயர், தேதி மற்றும் தொகை போன்ற அத்தியாவசிய விவரங்களை மட்டும் சேர்க்கவும்.

**தொடர்பை மேம்படுத்த:**

» எழுதப்பட்ட ஒப்பந்தங்கள்: பின் திகதியிட்ட காசோலைகளைப் பெறும் எவருடனும் தெளிவான எழுத்துப்பூர்வ ஒப்பந்தங்களை ஏற்படுத்தவும். காசோலையை வைப்பு செய்வதற்கான காலக்கெடு திகதி மற்றும் பணம் செலுத்துதல் பற்றிய ஏதேனும் தொடர்புடைய விவரங்களைக் குறிப்பிடவும்.

» மின்னணு பதிவுகள்: பணம்பெறுபவர், திகதி, தொகை மற்றும் ஏதேனும் ஒப்பந்தங்கள் உட்பட வழங்கப்பட்ட பிற்பட்ட காசோலைகளின் மின்னணு பதிவுகளை பராமரிக்கவும்.

பயன்படுத்துவதால் ஏற்படும் அபாயங்களை வணிகங்கள் கணிசமாகக் குறைக்கலாம். நீண்ட காலமாக பாதுகாப்பான மற்றும் நம்பகமான மின்னணு கட்டண முறைகளைப் பின்பற்றுவது பெரும்பாலும் சிறந்த நடவடிக்கையாகும்.

அபாயங்கள் மற்றும் மதிப்பிழந்த காசோலைகளை சமாளிக்க வணிகங்களுக்கான தீர்வுகள்:

**தடுப்பு நடவடிக்கைகள்:**

» எலெக்ட்ரானிக் பேமெண்ட்டுகளுக்கு மாறுதல்: திரும்பும் அபாய காசோலைகளை முழுவதுமாகத் தவிர்ப்பதற்கு இது மிகச் சிறந்த வழியாகும். இது வேகமானது, பாதுகாப்பானது மற்றும் தெளிவான தணிக்கைப் பாதையை விட்டுச்செல்கின்றது.

» கடன் தகுதி காசோலைகள்: பின் திகதியிட்ட காசோலைகளை ஏற்றுக் கொள்வதற்கு முன், வாடிக்கையாளர்களுக்கு, குறிப்பாக பெரிய பரிவர்த்தனைகளுக்கு கடன் காசோலைகளை இயக்குவதைக் கவனியுங்கள்.



» செக்யூரிட்டி டெபாசிட்கள்: சில சந்தர்ப்பங்களில் செக்யூரிட்டி டெபாசிட் என்பது பின் திகதியிட்ட காசோலைக்கு மாற்றாக இருக்கலாம். இது பணம் செலுத்தாத அபாயத்தைக் குறைக்கும்.

» தெளிவான ஒப்பந்தங்கள்: காசோலையை டெபாசிட் செய்வதற்கான காலக்கெடு மற்றும் தாமதமாக செலுத்தும் அபராதங்கள் உட்பட, பணம் செலுத்துவதற்கான விதிமுறைகளை கோடிட்டு எழுதப்பட்ட ஒப்பந்தங்களை உருவாக்கவும்.

**நவீன முறைகளைப் பின்பற்றுங்கள்:**

» எலக்ட்ரானிக் கொடுப்பனவுகளுக்கு மாறுதல்: முடிந்தவரை, நுகர்வுகள் அல்லது ஆன்லைன் கட்டண நுழைவாயில்கள் போன்ற மின்னணு கட்டண முறைகளுக்கு மாறவும். இவை வேகமான செயலாக்கம், சிறந்த பாதுகாப்பு மற்றும் தெளிவான தணிக்கை பாதைகளை வழங்குகின்றன.

» கட்ட அணுகுமுறை: முழுமையான மாற்றம் கடினமாக இருந்தால் ஒரு கட்ட அணுகுமுறையைக் கவனியுங்கள். குறைந்த ஆபத்துள்ள பரிவர்த்தனைகளுக்கு மின்னணு கட்டணங்களைப் பயன்படுத்துவதன் மூலம் தொடங்கவும் மற்றும் பின் திகதியிட்ட காசோலைகளை படிப்படியாக அகற்றவும்.

இந்த உத்திகளைப் பின்பற்றுவதன் மூலம் பின் திகதியிட்ட காசோலைகளைப்

**ஒரு காசோலை பவுன்ஸ் ஆகும்போது:**

» ஸ்டாப் பேமெண்ட் ஆர்டர்: உடனடியாக உங்கள் வங்கியைத் தொடர்பு கொண்டு, மதிப்பிழந்த காசோலையில் பேமெண்டை

நிறுத்துமாறு கோரவும். இது பணமாக்குவதற்கான மேலும் முயற்சிகளைத் தடுக்கிறது. (கட்டணம் விதிக்கப்படலாம்)

» கோரிக்கைக் கடிதம்: வாடிக்கையாளருக்கு முறையான கோரிக்கைக் கடிதத்தை அனுப்பவும் பணம் செலுத்துததைக் கோடிட்டுக் காட்டவும். உடனடித் தீர்வு கோரவும்.

» கலெக்ஷன் ஏஜென்சிகள்: தொடர்ந்து கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்கள் கடனை மீட்டெடுக்க ஒரு வசூல் நிறுவனத்தை ஈடுபடுத்துவதைக் கருத்தில் கொள்ளுங்கள்.

**பாதிக்கப்பட்ட வணிகங்களுக்கான சட்டப்பூர்வத் தீர்வுகள்:**

» Negotiable Instruments Act (NIA): இலங்கையின் NIA சட்டம் மதிப்பிழந்த காசோலைகளுக்கு சட்டப்பூர்வ வழியை கோடிட்டுக் காட்டுகின்றது.

» மீட்புக்கான வழக்கு: நிலுவைத் தொகையை திரும்பப் பெறுவதற்கு வணிகங்கள் வாடிக்கையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யலாம். இது ஒரு நீண்ட மற்றும் விலையுயர்ந்த செயன்முறையாக இருக்கலாம்.




» கிரிமினல் குற்றச்சாட்டுகள்: சில சமயங்களில், தீவிரம் மற்றும் நோக்கத்தைப் பொறுத்து வணிகங்கள் போலி காசோலையை (ழைரன உாநஙரந) வழங்குவதற்கு குற்றவியல் குற்றச்சாட்டுகளை அழுத்தலாம். இருப்பினும், இதற்கு வலுவான வழக்கு மற்றும் சட்ட அமுலாக்கத்தின் ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது.

**முக்கியமான கருத்தாய்வுகள்:**

» சட்ட கட்டணம்: வழக்குகள் மற்றும் குற்றவியல் குற்றச்சாட்டுகள் விலை உயர்ந்ததாக இருக்கும். சட்டச் செலவுகளுக்கு எதிராக சாத்தியமான மீட்டெடுப்பை எடைபோடுங்கள்.

» வாடிக்கையாளர் உறவுகள்: சட்ட நடவடிக்கை வாடிக்கையாளர் உறவுகளை சேதப்படுத்தும். இந்த வழியைத் தொடரும் முன் நீண்ட கால விளைவுகளைக் கவனியுங்கள்.

**மாற்று தகராறு தீர்வு:**

» மத்தியஸ்தம் வாடிக்கையாளருடனான சிக்கலைத் தீர்க்க மத்தியஸ்தம் விரைவான மற்றும் குறைந்த விலை வழி. நடுநிலையான மூன்றாம் தரப்பு ஒரு உடன்பாட்டை எட்டுவதற்கு ஒரு விவாதத்தை எளிதாக்கலாம்

உங்கள் சூழ்நிலையின் அடிப்படையில் குறிப்பிட்ட சட்ட ஆலோசனைக்கு இலங்கை வர்த்தகச் சட்டத்தை நன்கு அறிந்த ஒரு வழக்கறிஞரை அணுகவும். உங்கள் நிதியை மீட்டெடுப்பதற்கான மிகச் சரியான நடவடிக்கை குறித்து அவர்கள் உங்களுக்கு வழிகாட்ட முடியும்.

பின் திகதியிட்ட காசோலைகளைச் சுற்றியுள்ள சிக்கல்கள் மற்றும் சிக்கல்களுக்கான ஒட்டுமொத்த தீர்வு பாதுகாப்பான மற்றும் நம்பகமான மின்னணு கட்டண முறைகளை நோக்கி படிப்படியாக மாறுவதாகும். ஏனெனில்,

» குறைக்கப்பட்ட அபாயங்கள்: எலக்ட்ரானிக் கொடுப்பனவுகள் முன்கூட்டியே பணமாக்குதல், போதிய நிதியின்மை, மோசடி மற்றும் காசோலைகளுடன் தொடர்புடைய தவறான தொடர்பு ஆகியவற்றின் அபாயங்களை நீக்குகின்றது.

» அதிகரித்த செயற்திறன்: அவை வேகமான செயலாக்க நேரங்கள், மேம்படுத்தப்பட்ட பதிவு செய்தல் மற்றும் எளிதான சமரசம் ஆகியவற்றை வழங்குகின்றன.

» மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு: பல மின்னணு கட்டண முறைகள் உங்கள் நிதிகளைப் பாதுகாக்க வலுவான பாதுகாப்பு அம்சங்களுடன் வருகின்றன.

**வணிகங்களுக்கு:**

» எலக்ட்ரானிக் கட்டணங்களை ஊக்குவிக்கவும்: மின்னணு கட்டண விருப்பங்களைப் பின்பற்ற வாடிக்கையாளர்களை தீவிரமாக ஊக்குவிக்கவும். இந்த மாற்றத்தை ஊக்குவிப்பதற்காக மிகவும் கவர்ச்சிகரமானதாக மாற்ற சலுகைகள் அல்லது தள்ளுபடிகளை வழங்குங்கள்.

» ஃபேஸ் அவுட் காசோலைகள்: மின்னணு முறைகளுக்கு ஆதரவாக பின் திகதியிட்ட காசோலைகளை படிப்படியாக வெளியேற்றும் திட்டத்தை உருவாக்குங்கள். குறைந்த ஆபத்துள்ள பரிவர்த்தனைகளுடன் தொடங்குங்கள் மற்றும் உங்கள் வழியில் செயற்படுங்கள்.

**தனிநபர்களுக்கு:**

» டிஜிட்டல் கொடுப்பனவுகளைத் தழுவுங்கள்: முடிந்தவரை வணிகங்களைக் கையாளும் போது மின்னணு கட்டண முறைகளைத் தேர்ந்தெடுக்கவும். அவை பொதுவாக வேகமானவை, பாதுகாப்பானவை மற்றும் வசதியானவை.

» காசோலை அபாயங்களைப் புரிந்து கொள்ளுங்கள்: நீங்கள் ஒரு பின் திகதியிட்ட காசோலையை ஏற்க வேண்டும் என்றால் அதனுடன் தொடர்புடைய அபாயங்களைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் மற்றும் அதை டெபாசிட் செய்வதற்கான காலக்கெடு குறித்த தெளிவான தகவல்தொடர்புகளை உறுதிப்படுத்தவும்.

**அரசு மற்றும் நிதி நிறுவனங்கள்:**

» நிதி கல்வியறிவை ஊக்குவிக்கவும்: பாரம்பரிய காசோலைகளுடன் ஒப்பிடும்போது மின்னணு கட்டணங்களின் நன்மைகள் மற்றும் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை கல்வி பிரச்சாரங்கள் ஏற்படுத்தலாம்.

» உட்கட்டமைப்பில் முதலீடு செய்யுங்கள்: வணிகங்களுக்கும் தனிநபர்களுக்கும் அணுகக்கூடிய மற்றும் பயனர் நட்புடன் கூடிய வலுவான டிஜிட்டல் கட்டண உட்கட்டமைப்பை இலங்கை கொண்டிருப்பதை உறுதிசெய்யவும்.

வணிகங்கள், தனிநபர்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் இணைந்து செயற்படுவதன் மூலம், பின் திகதியிட்ட காசோலைகளுடன் தொடர்புடைய சிக்கல்களைக் குறைக்கும் மிகவும் திறமையான மற்றும் பாதுகாப்பான நிதிச் சூழலை உருவாக்க முடியும்.

இலத்திரனியல் கொடுப்பனவுகளை நோக்கிய மாற்றத்தை ஊக்குவித்தல் மற்றும் சில சட்ட மாற்றங்களை நடைமுறைப் படுத்துவதன் மூலம் பின் திகதியிட்ட காசோலைகள் தொடர்பான பிரச்சினைகளை கையாள்வதில் இலங்கை அரசாங்கம் முக்கிய பங்கு வகிக்க முடியும். சாத்தியமான அணுகுமுறைகளின் விவரங்கள் இங்கே:

**எலக்ட்ரானிக் கட்டணங்களை ஊக்குவித்தல்:**

» நிதி கல்வியறிவு பிரச்சாரங்கள்:

மின்னணு கட்டண முறைகளின் நன்மைகள் மற்றும் பாதுகாப்பு குறித்து குடிமக்களுக்கு கல்வி அளிக்கும் பொது விழிப்புணர்வு




பிரச்சாரங்களை தொடங்கவும். பின் திகதியிட்ட காசோலைகளுடன் தொடர்புடைய அபாயங்களை முன்னிலைப்படுத்தவும்.

» வணிகங்கள் மற்றும் நுகர்வோரை ஊக்குவித்தல்: மின்னணுப் பணம் செலுத்துவதை ஊக்குவிக்கும் வணிகங்களுக்கு வரிச் சலுகைகள் அல்லது பிற சலுகைகளை வழங்குதல். மின்னணு விருப்பங்களைப் பயன்படுத்தும் நுகர்வோருக்கு கேஷ்பேக்




வெகுமதிகள் அல்லது தள்ளுபடிகளைக் கருத்தில் கொள்ளுங்கள்.

» உட்கட்டமைப்பில் முதலீடு செய்யுங்கள்: இலங்கையில் ஒரு வலுவான டிஜிட்டல் பேமெண்ட் உட்கட்டமைப்பு இருப்பதை உறுதி செய்யவும். மலிவு விலையில் இணைய அணுகல், பயனர் நட்பு மொபைல் பேங்கிங் ஆப்ஸ் மற்றும் வணிகர்களால் மின்னணு கட்டண முறைகளை பரவலாக ஏற்றுக் கொள்வது ஆகியவை இதில் அடங்கும்.

**சாத்தியமான சட்ட மாற்றங்கள்:**

» பின் திகதியிட்ட காசோலைகளின் வரையறுக்கப்பட்ட பயன்பாடு: குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்கு பின் திகதியிட்ட காசோலைகளைப் பயன்படுத்துவதை படிப்படியாக நிறுத்துவது குறித்து அரசாங்கம் பரிசீலிக்கலாம். இது ஒரு கட்ட அணுகுமுறையாக இருக்கலாம். முதலில் அதிக மதிப்புள்ள பரிவர்த்தனைகளில் அமுல்படுத்தலாம்.

» ஆரம்பகால பணமாக்குதல் ஒழுங்குமுறை: வங்கிகள் பணமாக்குவதற்கு முன் ஒரு பின் திகதியிட்ட காசோலையில் எழுதப்பட்ட திகதிக்காக காத்திருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்த சட்டங்கள் செயற்படுத்தப்படலாம்.

» மதிப்பிழந்த காசோலைகளுக்கான அபராதங்களை வலுப்படுத்துதல்: இலங்கையில் பேச்சுவார்த்தைக்குட்பட்ட கருவிகள் சட்டம் உள்ள நிலையில், பணமதிப்பிழப்பு காசோலைகளை வழங்குவதற்கான அபராதங்களை மறுபரிசீலனை செய்து வலுப்படுத்துவது குறித்து பரிசீலிக்கவும். இது தவறான பயன்பாட்டைத் தடுக்கலாம்.

**முக்கியமான கருத்தாய்வுகள்:**

» பாரம்பரிய நடைமுறைகளுடன் சமநிலை: சில இலங்கையர்கள் இணைய அணுகல் இல்லாமை அல்லது மின்னணு முறைகள்பற்றிய பரிச்சயமின்மை காரணமாக காசோலைகளை விரும்பலாம். அனைத்து மக்கள் தொகைக்கும் ஏற்றவாறு சுமூகமான மாற்றத்தை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்.

» பங்குதாரர்களுடன் கலந்தாலோசித்தல்: சட்ட மாற்றங்களைக் கருத்தில் கொள்ளும்போது வங்கிகள், வணிகங்கள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஏஜென்சிகளுடன் ஒத்துழைக்கவும். இது பொதுவானதும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அணுகுமுறையை உறுதி செய்கின்றது.

**மாற்றுத் தீர்வுகள்:**

» பாதுகாப்பான காசோலை அமைப்புகளை மேம்படுத்துதல்: ஒரு தற்காலிக நடவடிக்கையாக மோசடி அபாயங்களைக் குறைக்க மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய பாதுகாப்பான காசோலை அமைப்புகளின் பயன்பாட்டை மேம்படுத்துவதை அரசாங்கம் ஆராயலாம். இருப்பினும், இது காசோலைகளுடன் தொடர்புடைய அனைத்து சிக்கல்களையும் தீர்க்காது.

இலத்திரனியல் கொடுப்பனவுகளை ஊக்குவித்தல், இலக்கு சட்ட மாற்றங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அனைத்து குடிமக்களின் தேவைகளையும் கருத்தில் கொண்டு இலங்கை அரசாங்கம் அனைவருக்கும் மிகவும் பாதுகாப்பான மற்றும் திறமையான நிதி அமைப்பை உருவாக்க முடியும்.

முடிவில், இலங்கையில் பின் திகதியிட்ட காசோலைகள் நீண்டகாலமாக நடைமுறையில் இருக்கும். அதே வேளையில், அவற்றின் வரம்புகள் மற்றும் அபாயங்கள் அதிகளவில் வெளிப்பட்டு வருகின்றன. இலங்கையின் நிதிய நிலப்பரப்பின் எதிர்காலம் பாதுகாப்பான மற்றும் திறமையான இலத்திரனியல் கொடுப்பனவுகளில் உள்ளது. இந்த முறைகளைப் பின்பற்றி, காசோலைகளை படிப்படியாக நீக்குவதன் மூலம் வணிகங்கள் வழி நடத்தலாம்.

நிதி அறிவை ஊக்குவித்தல், மின்னணு பரிவர்த்தனைகளை ஊக்குவித்தல், மற்றும் காசோலைகள் மீதான நம்பிக்கையை ஊக்கப்படுத்துவதற்கான சட்ட மாற்றங்களைச் செயற்படுத்துவதன் மூலம் அரசாங்கம் ஒரு முக்கிய பங்கை வகிக்க முடியும். டிஜிட்டல் எதிர்காலத்தைத் தழுவுவதன் மூலம் வணிகங்கள், தனிநபர்கள் மற்றும் முழுப் பொருளாதாரத்திற்கும் பயனளிக்கும் மிகவும் நெறிப்படுத்தப்பட்ட மற்றும் பாதுகாப்பான நிதி அமைப்பை இலங்கை உருவாக்க முடியும்.

+94-777-802-900 | Email: swaminathan@agsarma.com

# நீங்கள் நினைத்ததை அடைவதற்கு செல்வாக்கு மிக்கவராவது எப்படி?

**ஒரு தொழில் வெற்றி பெற உங்களுடைய வாடிக்கையாளர்கள் இன்றைக்கும் என்றைக்கும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டியது அவசியம். நீங்கள் சொன்னால் மற்றவர்கள் தட்டாமல் கேட்கும் நிலையை நீங்கள் அடைந்துவிட்டீர்கள் எனில், அதற்காக உங்களுக்குக் கிடைக்கும் வெகுமதி அளவற்றதாக இருக்கும்.**




**ஜீ சான்ஸ்**

வாழ்க்கையில் நாம் எந்த முடிவை எடுப்பதாக இருந்தாலும், நாம் மிகவும் மதிக்கும் நபரிடம் கலந்தாலோ சிக்க விரும்புகிறோம். அல்லது, அந்த விஷயம் பற்றி அவர் என்ன சொல்லி இருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டு, அவர் சொன்னபடியான ஒரு முடிவையே நாம் பல சமயங்களில் எடுக்கிறோம்.

அதுமட்டுமல்ல, நாம் சொல்வதை வைத்து மற்றவர்கள் முடிவை எடுக்க வேண்டும் என்றும் விரும்புகிற அளவுக்கு 'இன்ஃப்ளுயன்ஸ்'ஸான அதாவது, செல்வாக்குள்ள நபராக மாற நினைக்கிறோம்.

இப்படி மாறுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை சொல்லித் தருகிறது 'இன்ஃப்ளுயன்ஸ் இஸ் யுவர் சூப்பர் பவர்' (Influence is Your Super power) எனும் புத்தகம். அமெரிக்காவில் வசிக்கும் ஜீ சான்ஸ் (Zoe Chance) இந்தப் புத்தகத்தை எழுதியுள்ளார். இவர் யேல் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஆவார்.

### செல்வாக்குள்ள மனிதராவது எப்படி?

"நீங்க செல்வாக்கு மிக்க நபராக இருக்க ஆசைப்படுகிறீர்களா? என்று கேட்டால், பெரும்பாலானோர் ஆம் என்பார்கள். ஏனென்றால், இன்ஃப்ளுயன்ஸ் என்பது பவர். இன்ஃப்ளுயன்ஸ் மிக்கவராக இருப்பதால் தேவையான மாற்றங்களை நம்மால் கொண்டு வர முடியும். மற்றவர்களுடைய மனம், மூளை, முதலீடு எனப் பலவற்றையும் நாம் நினைக்கும் விதத்தில் திசை திருப்ப முடியும்.

இன்ஃப்ளுயன்ஸ் என்பது புவியீர்ப்பு விசையைப் போன்றது. பலரையும் நம்மை நோக்கி இழுக்க வல்லது. மகிழ்ச்சிக்கு வழிவகை செய்வது அது. வளர்ச்சிக்கும், செல்வத்துக்குமான ராஜ பாட்டையில் நம்மை அது பயணிக்க வைக்கும் என்பதுதான் இன்ஃப்ளுயன்ஸ் குறித்து பலரும் நினைக்கும் எண்ணமாக இருக்கிறது.

சரிங்க, எப்படி இன்ஃப்ளுயன்ஸ் கொண்ட நபராக உருவெடுப்பது என்று கேட்டால், 'அடப் போங்க ரொம்ப சூழ்ச்சி பண்ணணும், அற்பத்தனமான விஷயங்களைச் செய்யத் துணிய வேண்டும். அடுத்தவர்களுக்குப் பிடிக்கிறதோ, இல்லையோ கவலையே படாமல் நாம் நினைப்பதை வற்புறுத்தித் திணிக்க வேண்டும். இதெல்லாம் நமக்கு சரிப்பட்டு வராது என்று சொல்லிவிட்டு ஒதுங்கி நிற்க விரும்புகிறவர்கள்தான் பெரும்பான்மையானவர்கள்.

இன்ஃப்ளுயன்ஸ் என்றாலே ஒரு கெட்ட விஷயம் என்று நினைக்கும் அளவுக்கு ஸ்பான்சர்களின் தயாரிப்புகளை சமூக ஊடகங்கள் மூலமாக விற்பதும், வேலைக்கு ஆகாத பொருள்களை மிக நல்லது என்று சொல்லி வாடிக்கையாளர்களின் தலையில் கட்டுவதும், 'சரக்கு உள்ளவரையே விற்பனை அதனால் இப்போதே வாங்குங்கள்' என்று பொய் சொல்வதும்தான் இன்ஃப்ளுயன்ஸ் செய்தல் என மக்கள் புரிந்து வைத்து இருக்கின்றனர்.

### முன்னேற்றத்துக்கு உதவாது

சந்தைப்படுத்தல் துறையைப் பொறுத்த வரை, வாடிக்கையாளரை இலக்கு வைக்க இன்ஃப்ளுயன்ஸ் என்பது உபயோகிக்கப் படுவதால்தான் இந்த நிலை. ஒரு பொருளை அல்லது சேவையை விற்பதற்காக உபயோகிக்கப்படும் செல்வாக்கானது மக்களை உயிரற்ற பொருள்கள் என்ற கோணத்திலேயே பார்க்க முயலும் முயற்சியாகும். இந்த வித உத்திகள் சேல்ஸ் மற்றும் மார்க்கெட்டிங்கில் சற்று உபயோகமாக இருக்கலாம்.

ஆனால், அன்றாட வாழ்வில் நிச்சயமாக நமக்கு உதவவே உதவாது. உங்களுடைய மேலாளர், உடன் பணிபுரிபவர்கள், உங்களுடைய பணியாளர்கள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தில் இந்த மாதிரியான இன்ஃப்ளுயன்ஸைக் கொண்டு எதையும் சாதிக்கவே முடியாது. ஒருவருடன் நல்லுறவை வளர்க்க வேண்டும் எனில், அந்த உறவைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். பாவித்த கார் விற்பனையில் இந்த டெக்னிக் (உறவை பேணிப் பாதுகாப்பது) உதவாது. எல்லாத் தொழில்களுமே பரிந்துரைகள், வாடிக்கையாளர்கள் நல்ல வார்த்தைகளைக் கூறுவதன் மூலம் உருவாகும் புதிய வாடிக்கையாளர்கள், வாடிக்கையாளர்களின் விசுவாசம் (ஊரளவழஅநச டழலயடவல) மற்றும் பணியாளர்கள் நீண்ட காலத்துக்கு நிலைத்திருப்பது போன்ற நீண்ட கால அடிப்படையிலான விஷயங்களைக் கொண்டே வளர்ச்சி அடைகிறது.

ஒரு தொழில் வெற்றி பெற உங்களுடைய வாடிக்கையாளர்கள் இன்றைக்கும் என்றைக்கும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டியது அவசியம். நீங்கள் சொன்னால்



மற்றவர்கள் தட்டாமல் கேட்கும் நிலையை நீங்கள் அடைந்துவிட்டீர்கள் எனில், அதற்காக உங்களுக்குக் கிடைக்கும் வெகுமதி அளவற்றதாக இருக்கும்.

இதனாலேயே நன்றாகப் பேசத் தெரிந்த கோர்ப்பரேட் எக்ஸிக்யூட்டிவ்கள் சிறந்த லீடர்களாக மதிக்கப்படுகின்றனர். நன்றாகப் பேசத் தெரிந்த மருத்துவர்களுக்கு எதிராக சேவைக்குறைபாடுகளுக்கான (நோயாளிக்கு என்ன நேர்ந்தாலும்) வழக்குகள் போடப்படுவது குறைவாக இருக்கிறது.

இந்த வித பரிவர்த்தனை சார்ந்த செல்வாக்கு (Transactional Influence) என்பதைத் தாண்டி பரஸ்பர நன்மைக்கான இன்ஃப்ளூயன்ஸைக் கொண்டிருக்கும் நபராக உருவெடுப்பது எப்படி என்பதைத் தெரிந்துகொள்வது மிகவும் அவசியம்.

### பிறப்பிலேயே நமக்குள் திறமை

இன்ஃப்ளூயன்ஸ் மிக்க நபராக மாறுவதற்குத் தேவையான விஷயங்கள் பிறக்கும்போதே நமக்குள் இருக்கின்றன என்று சொன்னால் நீங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள். ஆனால், அதுதான் உண்மை.

பிறக்கும்போது உங்களிடம் பெரிய திறமை எதுவும் இல்லை என்றாலும், நீங்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் பேசக் கற்றுக்கொண்டபின் அந்தப் பேச்சின் மூலம் உங்களுடைய செல்வாக்கை நீங்கள் அதிகப்படுத்திக் கொண்டீர்கள். எது உங்களுக்கு வேண்டும், எது உங்களுக்கு வேண்டவே வேண்டாம் என்றெல்லாம் நீங்கள் தெளிவாக சுற்றியிருப்பவர்களிடம் கூற ஆரம்பித்தீர்கள்.

உங்களுக்குத் தேவையான பல விஷயங்களையும் உங்கள் செல்வாக்கின் மூலமே நீங்கள் பெற்றீர்கள். நீங்கள் வளர வளர உங்களுடைய ஐடியாக்களுக்கு செயல்வடிவம் கொடுக்க பலரையும் இன்ஃப்ளூயன்ஸ் செய்தீர்கள்.

பரஸ்பர செல்வாக்கு மூலம் காரியங்களைச் சாதித்துக்கொள்வது எப்படி என்பது நம் ரி.என்.ஏ-வின் முலமே நமக்குள் வந்துவிடுகிறது. அதுதான் நீங்கள் எந்த நிலையில் இருந்தாலும் இன்றுவரை நீங்கள் வாழ்ந்த வாழ்க்கையில் நீங்கள் பெற்றிருக்கும் அனைத்து வெற்றிகளையும் உங்களிடம் கொண்டுவந்து சேர்த்தது. நீங்கள் இனிமேல் போக நினைக்கும் பாதையில் வெற்றிகரமாகப் பயணிக்க அதுவே உங்களுக்கு உதவும்.

ஆனால், நம் வாழ்வில் சிறிய வயதில் இருந்ததைப்போலவா, நாம் வளர வளர இன்ஃப்ளூயன்ஸ் நமக்கு உதவுகிறது? இல்லவே இல்லை. வளர வளர சிக்கலான ஒன்றாக இது மாறிக்கொண்டேபோகிறது.

சிறிய வயதில் உங்களுடைய இன்ஃப்ளூயன்ஸ் அதிகரித்துக் கொண்டே போனாலுமே நாளடைவில் உலகத்தில் பணிந்துபோகவும் சுற்றி இருப்பவர்களிடம் நல்லவனாகத் திகழவும் நாம் பழக்கப்பட்டுவிடுகிறோம். பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் எனப் பலருக்கும் கட்டுப்பட்டு நாம் நடக்க வேண்டும் என்கிற பழக்கத்தை நம்மிடம் உருவாக்குகின்றனர்.

‘அதிகாரம் பண்ணாதே, விரட்டி ஒரு விஷயத்தை செய்ய முயலாதே’ என்றெல்லாம் வேறு நமக்கு அறிவுரைகள் அவ்வப்போது தரப்படுகின்றன. கஷ்டப்பட்டு உழைச்சாதான் நல்லது கிடைக்கும், உன்னுடைய வாய்ப்பு வரும் வரை பொறுமையாகக் காத்திருக்க வேண்டும், அலப்பறை செய்யக் கூடாது, ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது என்பது போன்றவையும் இதில் அடங்கும்.

‘அடுத்தவர் நலனுக்குக் குரல் கொடு, உனக்காகக் குரல் கொடுக்காதே. திமிர், பெருமை பிடித்தவன்’ என்றெல்லாம் ஊர் சொல்லிவிடும் என்பது போன்ற அறிவுரைகளுக்கும் பஞ்சம் இருக்காது. இதை எல்லாம் கேட்டு நடக்கத் தொடங்கியபின், ‘என்னடா இது? சிறு வயதில் எவ்வளவு இன்ஃப்ளூயன்ஸுடன் இருந்தோம். அந்த இன்ஃப்ளூயன்ஸை வைத்து இப்போது எதையும்சாதிக்க முடியவில்லையே என்கிற குழப்பம் மெள்ள மெள்ள நம் மனதில் குடிகொள்ள ஆரம்பிக்கும்.

### வெளியில் செல்வாக்கு! வீட்டில் இல்லை

இதையும் தாண்டிய சில விஷயங்களும் இருக்கின்றன. சில விஷயங்களில் செல்வாக்குடன் இருக்கும் சிலரால் பல விஷயங்களில் செல்வாக்குடன் இருக்க முடியாத நிலையும் இருக்கவே செய்யும். அதாவது, ஊருக்குதான் உபதேசம் செய்பவர்களாக இவர்கள் இருக்கிறார்கள்.

உதாரணமாக, வாடிக்கையாளர்களிடம் செல்வாக்காக இருக்கும் ஒருவரால் ஏனைய மனிதர்களிடம் செல்வாக்காக இருக்க முடியாது போகும். வெற்றிகரமான சி.ஈ.ஓ-களில் சிலர், தங்களுடைய மகள்களிடம் அவர்களுடைய அறையை சுத்தமாக வைத்துக்கொள்ள சொல்லக்கூட முடியாத நிலையில் இருப்பதைப் பார்த்திருக்கிறேன். மற்றவர்களுடைய பிரச்னைகளுக்காகக் குரல் கொடுத்து சிறைக்குச் செல்லக்கூட துணிந்தவர்களில் பலர், அவர்களுடைய பிரச்னைக்காக முனைப்புடன் பேச முடியாமல் போவதும் உண்டு” என்று சில முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டும் ஆசிரியர், செல்வாக்கு மிக்க மனிதராக இருப்பதற்கு முதலில் நமக்கு என்ன வேண்டும் என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும் என்கிறார்.

உங்களுக்காகவோ, உங்களை சார்ந்தவர்களுக்காகவோ நீங்கள் ஒரு விஷயம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதாகட்டும், உங்களுக்கோ, உங்களைச்சார்ந்தவர்களுக்கோ எதிர்பாராத ஒரு சாதகமான உதவியையோ, வாய்ப்பையோ பெற்றுத் தருவதாகட்டும், உங்கள் குடும்பத்துக்கோ, உங்களைச் சுற்றி வசிப்பவர்களுக்கோ, இந்த உலகுக்கோ பெரியதொரு அர்த்தமுள்ள மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை நடத்துவதாகட்டும்... இவை எதுவானாலும் இன்ஃப்ளூயன்ஸ் என்ற ஒரு சூப்பர் பவரே உங்களுடைய முயற்சியில் வெற்றியைக் கொண்டு வந்து சேர்க்கும்” என்கிறார் ஆசிரியர்.

இன்ஃப்ளூயன்ஸ் என்பதைக் கொண்டு வருவதில்இருக்கும்அத்தனைநுணுக்கமான விஷயங்களையும் அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் நிஜ வாழ்க்கை உதாரணங்கள் எனப் பலவற்றின் மூலமாக எளிய நடையில் விளக்குகிறது இந்தப் புத்தகம்.

“இந்தப் புத்தகத்தை படிப்பதன் மூலம் இன்ஃப்ளூயன்ஸ் என்பது குறித்த உங்களுடைய அறிவும் புரிதலும் மிகவும் பெரியதாகும். இதன் மூலம் கிடைக்கும் ஞானமே உங்களை அதிக செல்வாக்குக் கொண்டவர்களாக உருவாக்கும்” என்று கூறி புத்தகத்தை முடிக்கிறார் ஆசிரியர்.

செல்வாக்கை விரும்பாத நபர்களே இந்த உலகில் இல்லை. செல்வாக்கு குறித்த சரியான புரிந்துகொள்ளலை உருவாக்கி, அது குறித்த மாயைகள் பலவற்றை விலகச் செய்யும் இந்தப் புத்தகத்தை அனைவரும் படித்துப் பயன்பெறலாம். அதன்மூலம், நீங்கள் புழங்கும் மக்கள் இடையிலும், அலுவலகத்திலும் பிசினஸ் வட்டாரங்களிலும் உங்களை நீங்கள் தனித்துவமாகக் காட்டிக்கொள்ள முடியும்!

# முல்லை ஓய்வு நகர்
# Mullai Rest City

## எழுதுமட்டுவாழ் நகரில்
## 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

*இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!*

**உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.**
**மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்**
**அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்**






முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்






4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்றிட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

**தொடர்புகளுக்கு: 0777 43 5557**

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.04.2024இல் வெளியிடப்பெற்றது.